வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

USHA உஷா
மின்சார விசிறிகள்

| | | |
|---|---|---|
| சிலிங் | 56" | ரூ 240 |
| ,, | 48" | ரூ 235 |
| ,, | 36" | ரூ 205 |
| பெடஸ்டல் | 16" | ரூ 215 |
| மேசை (Table) | 16" | ரூ 160 |

சோல் ஏஜண்டு:- G H. REIMOO

புத்தகம் 6 நந்தன ஸு ஆவணிமீ 9உ [24-8-52] ஞாயிற்றுக்கிழமை ஜுல்காயிதாபிறை 2 இதழ் 13

# பிரதமர்நியமனத்தில்நடைபெற்றசதி

## புத்தக ரூபத்தில் பிரசுரம்

## மந்திரிசபையில்விவாதிக்கப்படும்

[நமது நிருபர்]

கடந்த ஒரு வார காலமாக பாராளுமன்ற வட்டாரத்திலே ஒரு சிறிய பிரசுரம் சற்றுப் பரபரப்பை ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது. டைப் அடித்து நகல் செய்யப்பட்ட இப்பிரசுரம் ஒருசில பாராளுமன்ற அங்கத்தவர்களிடையேயும் உயர்தர உத்தியோகஸ்தர்களிடையேயும் விநியோகம் செய்யப்பட்டதாம்.

சேர் ஜோன் கொத்தலாவலையின் சொந்த டயரிக் குறிப்புக்கள் போல் தயாரிக்கப்பட்டிருக்கும் இச்சிறிய புத்தகத்தில் திரு டி எஸ். சேனநாயகா குதிரையிலிருந்து தவறி விழுந்து நோயுற்ற சமயந் தொடக்கம் திரு டட்லி சேனநாயகா பிரதமரானதுவரை பிரதமர் பதவிக்காக நடைபெற்ற சதிகளையும் சுற்று மாற்றுக்களையும் துரோகச் செயல்களையும் பற்றி விவரமாக எழுதப்பட்டிருக்கிறது

"தோட்டப் பாதையிலே" என்று பெயரிடப்பட்டிருக்கும் மேற்படி புத்தகத்தின்மீது அடுத்த வியாழக்கிழமை மந்திரி சபையில் விவாதம் நடைபெறும்'

விவாதத்தை நிதிமந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்தனா ஆரம்பித்து வைப்பார். இப்பிரசுரத்திற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று கூறும்படி சேர் ஜோன் கொத்தலாவலைக்கு உத்தரவிட வேண்டுமென்று அவர் மந்திரி சபையைக் கேட்பாரென்று நம்பப்படுகிறது.

தற்போதைய பிரதம மந்திரியைப் பதவியிலமர்த்திய "சதித் திட்டத்தை" இப்புத்தகம் அம்பலப்படுத்துகிறது. சேர் ஜோன் கொத்தலாவலையின் தினக் குறிப்புப்போல் அது எழுதப்பட்டிருக்கிறது அதில் யாருடைய கையெழுத்தும் கிடையாது. ஆனால் சேர் ஜோனின் நெருங்கிய சகாக்களிடம் மட்டும் அது சுற்றறிக்கையைப்போல விநியோகிக்கப் படுகிறதாம்.

மந்திரி சபைக் கூட்டத்தில் இதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதை ஒருசில மந்திரிகள் எதிர்ப்பார்களென்று விஷயம் தெரிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. யு என் பியைக் கட்டி வளர்த்த ஒருவருக்குச் செய்த துரோகங்களைப் பற்றிய விபரங்களைத்தான் அந்தப் பிரசுரம் விளக்குகிறதே தவிர அரசாங்கத்தின் அதிகார பூர்வமான கொள்கையை அது தாக்கவில்லையென்றும் ஆகவே அப்புத்தகத்தைப் பற்றி விவாதிக்க மந்திரி சபைக்கு அதிகாரம் கிடையாதென்றும் உள்நாட்டு மந்திரி திரு ஏ. ரத்நாயக்கா ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பக் கூடும். அரசாங்க கொள்கைக்கு அது சவால் விடுக்கவில்லையென்றும், பிரதம மந்திரியைப் பதவியிலமர்த்திய தனிப்பட்ட சிலரைத்தான் அது தாக்குகிறதென்றும் திரு. ரத்நாயக்கா சுட்டிக் காட்டுவாராம்.

### பல்கலைக் கழகத் தோட்டங்களில் நஷ்டம்

அதன் வரவு-செலவு திட்டத்தில் துண்டுவிழும்

பேராதெனியில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் விடப்பட்ட தேயிலை ரப்பர். தோட்டங்களிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு வருடமொன்றுக்கு ஏறத்தாழ ரூ 270,000 நஷ்டம் ஏற்படும். இது விஷயமாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால், 10 வருடங்களுக்கு இம்மாதிரி நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இத்தோட்டங்களில் விற்பனைக்கான மரங்கள் உற்பத்தி செய்யலாமென்று ஆலோசனை கூறப்படுகிறது.

சமீபத்தில் பல்கலைக் கழக சபையில் விவாதிக்கப்படவிருக்கும் வரவு—செலவுத் திட்டத்தில் ரூ 270,000 துண்டு விழுமென்று கருதப்படுகிறது.



சமீபத்தில் கொண்டாடப்பட்ட உலக வர்த்தக வாரத்தை முன்னிட்டு வாஷிங்டனிலுள்ள அமெரிக்க வர்த்தக இலாகாகாரியாலய கட்டடத்தில் ஒருபொருட் காட்சியும் நடைபெற்றது. இப்படத்தில் பொருட்காட்சியின் இலங்கைப் பகுதியைக் காண்க

(இடமிருந்து வலம்) பிலிப்பைன் தூதுவர் காரியாலயத்தைச் சேர்ந்த செல்வி காரிடாட் விராக்ரஸ், இலங்கைத் தூதுவர் காரியாலய வர்த்தகக் காரியதரிசி திரு வி. எல். பி. மெண்டிஸ், இந்தியத்தூதுவர் காரியாலய விமானப் பகுதி உதவி அதிகாரியின் மனைவி திருமதி எச். டி. மேஹ்ரா ஆகியோர் இலங்கையில் வெள்ளியினால் செய்யப்பட்ட தேநீர் போச்சியொன்றை வியப்புடன் கவனிக்கின்றனர்.

## அப்பீல் வழக்குகளுக்கு அரசாங்கச் செலவு

### ஒன்றேகால் லட்சம் அதிகப்படியாக வேண்டுமாம்

அட்டோர்னி — ஜெனரலின் செலவுகளுக்காக ரூ 125 000 அதிகப்படியாக ஒதுக்க வேண்டுமென்று அரசாங்கம் சமீபத்தில் பாராளுமன்றத்தின் அனுமதியைக் கோரும் வரவு செலவுத் திட்டத்தில் பிரஸ்தாப செலவுகளுக்காக ரூ 150,000 ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பிரிவு கவுன்ஸலுக்கு அப்பீல் செய்யப்பட்டிருக்கும் சில வழக்குகள் சம்பந்தமாக அரசாங்க செலவுகளுக்காகவே மேற்படி தொகை தேவைப்படுகிறது.

இலங்கை இந்தியர் பிரஜா உரிமை வாக்குரிமை சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பிரிவிகவுன்ஸிலில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை நேயர்கள் அறிவார்கள்.


### வயோதிகர்விடுதியில ராணுவப்பயிற்சி முகாம்?

பிரமாதமாகப் பறைசாற்றப்பட்ட வயோதிகர்கள் விடுதியின் எதிர்காலம் ஆபத்துக்குள்ளாகலாம்.

கொக்கலயில் ராணுவப் பயிற்சி முகாம் ஆரம்பிக்கப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வயோதிகர்களின் விடுதிகளைப்பற்றிய அரசாங்கக் கொள்கையை அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யவிருக்கிறது. ராணுவப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக கொக்கல வயோதிகர்களின் விடுதியை அரசாங்கம் மூடிவிடுமென்று சொல்லப்படுகிறது.

வயது 80 ஆனால் வாதமே இல்லை ஏன்சீனடிதைலம்பாவித்துவந்தேன்

என்று பெருமை பேசும் வயோதிபர்கள் எத்தனையோ பேர்



ஓ. எல். எம். யூசுப்

ஹெர்னியாவாதம அண்டவாதம, பாரிசவாதம், உழுகக்கு உடைவு, முறிவு, குத்து, வலி, சிறுபிள்ளைவாதம (Infantile Paralysis) நோவு, மூலவலி போன்ற எவ்வகை காலம் சென்ற நோய்களானாலுமசரி தீரசுகம்.

மெலிந்துபோன உடம்பை கொழுக்கச் செய்யும். மேல்நாட்டு இராசவைத்தியர்களின் புகழ்பெற்ற ஒரே தைலம் இதுவே

சிறிய போத்தல் 2 தபால் செலவுடன் ரூபா 3-50
,, ,, - ,, ரூபா 5-50

ஓ எல் எம். யூசுப் வாதநோய் நிபுணர்

Rahmania Medical Stores & Dispensary,
327, Dematagoda Road, Maradana, Colombo-9.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

வரிஒன்றுக்கு 50 சதம் 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00

### தேவை

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு கொழும்பு.

டபிள் டிமைசைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செஸ் உடனடியாக தேவை. விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன் 194, ஏ தட்டாதெரு. கொழும்பு-12.

வேலை செய்யக்கூடிய அச்சாபீஸ் தேவை விலை குறித்து விண்ணப்பிக்கவும்.
L. A. 202 C/o சுதந்திரன்

நல்ல நிலைமையிலுள்ள சோடா இயந்திரம் தேவை. மிகக் குறைந்த விலை குறித்து எழுதுக.
L. A. 203 C/o சுதந்திரன்

### வியாபாரம்

மிஸ் கனகம்-புதுமையான நாவல் 35 பக்கங்கள். தெள்ளிய தமிழ்நடை. விற்பனவு ஏஜண்டுகள் தேவை நல்ல கமிஷன் தரப்படும்.
156, தட்டாதெரு, கொழும்பு.

அறிஞர் அண்ணா முன்னேற்றக் கதைகள் 25 சதம் ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். மறுமலர்ச்சி நிலையம், 18, மெயின்வீதி கொஸ்லாந்தை

வெள்ளவத்தை தி. மு. க. நூல் நிலையத்தில் உறுப்பினராகச் சேர விரும்புவோர் விபரங்கட்கு நூல் நிலைய அதிகாரி 7. கொலிங்வூட் பிளேஸ் வெள்ளவத்தை என்று எழுதவும். வெளியூர் வாசகர்கட்கு விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது.


## முத்தமிழ் கலா மன்றம்

கொழும்பு அண்டர்சன் கல்லூரி முத்தமிழ் கலா மன்ற இரண்டாம் விழா சமீபத்தில் அதிபர் திரு சி எம். ஜே. மத்தியூ தலைமையின்கீழ் நடைபெற்றது.

மன்றக் காரியதரிசியவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப் பட்டபின் மாணவி நசீரா பேஹம் கான் "மாணவரும் பொது நலச் சேவையும்" என்னும் விஷயம் பற்றியும், செனட்டர் ஜனுப் ஏ. எம். ஏ. அஸீஸ் 'பாரதி' என்னும் விஷயம் பற்றியும், வித்துவான் பண்டிதர் திரு எப். எக்ஸ் சி. நடராஜா 'பாண்டியன் தமிழ்' என்னும் விஷயம் பற்றியும் சொற்

## கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

கே. நடராஜா. பெரிய நீலாவணை

கே: அரிய பெரிய கேள்விகளெல்லாம் சரியான பதில்களைச் சொல்கின்ற குயுக்தியாரே! ஒரு கன்னிப் பெண்ணின் மோகனப் புன்னகைக்கு எத்தனை அர்த்தங்கள் உண்டென்று உம்மால் உரைக்க முடியுமா? ......எங்கே பார்க்கலாம்.

ப: ஒரு கன்னி ஒரு ஆடவனைப்பார்த்து நீர் கூறியபடி செய்தால் அதற்கு ஒரே அர்த்தந்தான் உண்டு. அதாவது அவள் தாயாக விரும்புகிறாள் என்பதுதான் அந்த அர்த்தம்.

❖

எம். சின்னராஜா மட்டக்களப்பு

கே: வேலையில்லாத் திண்டாட்டம் படித்தவர்களுக்கா அல்லது படியாதவர்களுக்கா?

ப: இரு சாராருக்கும் ஏற்படலாம். ஆனால் காக்காய் பிடிக்கத் தெரிந்தவருக்கு அது ஒருபோதும் ஏற்படாது.

❖

ப. க. கனகசபை, கொடிகாமம்

கே: சந்தேகம் என்பது என்ன?

ப: ஒரு வயதுவந்த வாலிபன் ஒரு வயதுவந்த பெண்ணோடு தனிமையில் காணப்பட்டால் சமூகத்திற்கேற்படும் ஒரு தொற்று வியாதி.

கே: நீங்கள் பதிலளிப்பதற்கு வேறு யாராவதின் உதவியை நாடுவதுண்டா?

ப: உண்டு அதுதான் கேள்வி கேட்போரின் உதவி. அவர்கள் கேள்வி கேட்டு உதவி செய்யாவிட்டால் நான் எப்படி மொட்டையாகப் பதிலளிக்க முடியும்?

கே: தற்காலத்தில் யாவராலும் விரும்பக் கூடிய மூன்று பொருட்கள் எவை?

ப: பணம், பணம், பணம்

கே: யுக்தியுள்ளவன் என்று யாரைக் கூறலாம்?

ப: கொஞ்சம் குயுக்தியும் உள்ளவனை.

❖

எம். ஆர். எம். யாசீன், டெனிப்பிட்டியா

கே: இரகசியமாக கதிர்காமத்துக்கு யாத்திரை செய்த இருவர் தீபாலங்காரம் செய்துவிட்டு வந்தார்களாமே! உண்மையா?

ப: ஆம், அவர்கள் கற்பூரத்தைக் கொளுத்துவதற்காக திரைச்சீலையைப் பொசுக்கித் தீபாலங்காரம் செய்தார்களாம்!

❖

★ எம். பரமானந்தம், யாழ்ப்பாணம்

கே: கடந்தவாரம் பாராளுமன்றத்தில் கைத்தொழில் மந்திரி பொன்னம்பலத்திற்கு காலிப் பிரதிநிதி தஹநாயகா நல்ல சூடு கொடுத்தார் அல்லவா? இன்று இலங்கையில் தக்க சூடு கொடுப்பதில் தகநாயகாவைவிடத் திறமைசாலிகள் யாராவது உண்டா?

ப: உண்டு. இந்த சூடு கொடுக்கும் வேலையில் எல்லோரையும் தோற்கடித்துவிட்டார் கதிர்காமத் தொகுதியின் பிரதிநிதியாகிய கந்தப் பெருமான் என்பவர்கள். அவர் கொடுத்த சூட்டைப் பொறுக்க முடியாமல் எதிர் ...

பாதிரியார் இன்னும் ஹட்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் எழும்ப முடியாமல் கிடக்கிறாரே!

❖

எம் அன்னலெட்சுமி, மட்டக்களப்பு

கே: மனிதன் ஏன் பிறக்கிறான்?

ப: அவனுடைய அப்பா அம்மா அவன் பிறப்பதற்கு பத்து மாதங்களுக்கு முன்பு செய்த ஒரு சிறு தவறினால்.

❖

வி. கே. சபாபதி, அவிசாவிளை

கே: கற்பு இழந்த ஒரு பெண்ணை நான் மணக்க விரும்புகிறேன். என் இன்பத்திற்கு ஏதும் தடங்கல் ஏற்படுமா?

ப: இருந்த தடங்கலும் ஏற்கனவே நீங்கிவிட்டதே. பின்பு என்ன தடங்கல் ஏற்படப்போகிறது?

❖

கா. வீரமணி, இரத்தினபுரி

கே: கொழும்பில் நடக்கும் சினிமாக்களில் எது நல்லது?

கொழும்பில் இன்னும் சினிமா நடக்கவில்லை. சில தியேட்டர்களில் அது ஓடுவதாகச் சொல்லப்படுகிறது.

> **பரிசு ரூ. 3-00**
>
> யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்கார்ட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும் தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்தும் ஹாஸ்யமுமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்தகேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

❖

பி. எம். எஸ். சதக்கத்துல்லா, கொழும்பு

கே: இலங்கைத் தீவை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார்?

ப: நமது புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனர் பரணவிதாரணையிடம் இக்கேள்வியைக் கேட்டால இலங்கையைக்கண்டு பிடித்தவர் மட்டுமல்ல அதைப் படைத்தவர்களும் சிங்களவர்கள் தான் என்று பதில் சொல்வார்.

❖

கே. சி. செல்வன், மட்டக்களப்பு

கே: அரிசி குறைந்தால் மாவைச் சாப்பிடும்படி புத்தி கூறுகிறார் தயாளகுணன் திரு குமாரசாமி. ஆனால் மேலதிகமாக விநியோகப்பட்டிருக்கும் அரிசிக் கூப்பன்களுக்கு என்ன பதில் கூறுவார்?

ப: அரிசி கிடைக்காதவர்கள் கூப்பன்களைச் சாப்பிடும் ... கூறுவார்.

❖

சிவகுரு சுப்பிரமணியம், புத்தூர்

கே: உமக்கு இவ்வளவு யுக்தியிருந்தும் ஏன் மூன்றாம் வகுப்பில் ரயில் பிரயாணம் செய்கிறீர்?

ப: எவ்வளவு யுக்தியை நீட்டினாலும் மேல் வகுப்பு டிக்கட்டுகள் தருகிறார்கள் இல்லையே

❖

வி. தம்பித்துரை, திரிகோணமலை

கே: வாலிபர்களின் முதல் கடமை என்ன?

ப: காலையில் எழுந்தவுடன் முகச்சவரம் செய்து கொள்வது.

❖

து. சுந்தரமூர்த்தி, மட்டக்களப்பு

கே: சுகாதாரத்தைப் பேணுவதற்காக மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்த திரு நல்லையா குணமடைந்து திரும்பி வந்தால் என்னவாகலாம்?

ப: சுகாதார மந்திரியாகலாம்?

❖

ஆர். வி. ஆறுமுகம் டெயிலர், ரங்கலை

கே: உயர்ந்த ஜாதியினர் யார்? தாழ்ந்தமக்கள் யார்?

ப உயர்ந்த ஜாதியினர் மலைவாசிகள் தாழ்ந்த மக்கள் நீர்மூழ்கிக் கப்பற் சிப்பந்திகள்.

❖

பி. சவரிமுத்து, ஊர்காவற்றுறை

கே: உலகில் பேசப்படும் மொழிகளில் மிகச் சிறந்த மொழியெது?

ப: அவரவர் தாய்மொழி

❖

எஸ். ராஜலிங்கம், சுன்னாகம்

கே: நாகரீகப் பெண்ணின் அழகு எங்கேயிருக்கிறது?

ப: அவளுடைய கைப் பைக்குள் பவுடர், கிரீம், லிப்ஸ்டிக்குகளாகவிருக்கிறது.

❖

அ. வேலாயுதபிள்ளை ஒட்டிசுட்டான்

கே: எது இருந்தால் சாப்பிடலாம்?

ப: மனமிருந்தால் சாப்பிடலாம்.

❖

ஏ. ஆர். கோபாலன், திரிகோணமலை

கே: ஒரு குடும்ப ஸ்திரீக்கும் ஒரு விலைமகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: பாவம், குடும்பஸ்திரி தினமும் ஒரே சொதியோடு சாப்பிடுகிறாள். விலைமகளோ தினமும் அறுசுவையோடு அருந்துகிறாள்.

❖

டட. டபிள்யு பத்மநாதன், வண்ணார்பண்ணை

கே: பெண்களுக்கு வெட்கம் இருப்பதேன்?

ப: ஆண்களுக்கு அது இல்லாததால்

❖

வி. பி. நல்லதம்பி, திரிகோணமலை

கே: ஒரு எழுத்தாளன் எழுத ஆரம்பிக்குமுன் அவன் எதைக் கைக்கொள்ள வேண்டும்?

ப: பேனாவை.

❖

எம் எஸ் எம். தாஹா, டெனியாபிட்டியா

கே: எனது சகோதரி உம்மீது காதல் கொள்கிறாள் உமது விருப்பம் என்ன?

ப: இந்த விஷயங்களிலெல்லாம் என் செயலாவது யாதொன்றுமில்லை என் மனைவியின் விருப்பத்தைக் கேட்கவேண்டும்.

❖

அய்யாபட்டு திக்கலை

கே: நான் எனது தந்தையர்க்கு எவ்வளவு அன்புடன் நடந்தாலும் அவர் ஏன் என்னுடன் அன்பாக நடந்து கொள்ளவில்லை?

ப: முதலில் அவர்தான் உம் தந்தை என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ளும்.

❖

எம். எஸ். எம். முகமத், யாழ்ப்பாணம்

கே: பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே இந்தக் காலத்தில் கூட பேய்கள் அப்படி இரங்குகின்றனவா?

ப: ஆம், ஆனால் ஹிஸ்டீரியா என்ற பெயரோடு இரங்குகின்றன.

❖

எம். ஏ சுந்தரன், யாழ்ப்பாணம்

கே: ஐயா குயுக்தியாரே உமது புத்திக் கூர்மையை அறிந்த கன்னியொருத்தி உம்மைக் காதலிக்கபோகிறாளாம். காதலிப்பதற்கு முன் உமது புகைப்படத்தைப் பார்க்கவேண்டுமாம். தயவு கூர்ந்து உமது புகைப்படத்தை கூடிய சீக்கிரத்தில் பிரசுரிப்பீர்களா?

ப: முடியாது என் படத்தைப் பார்த்தால் அவள் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுவாளே!

★ இவ்வாரம் ரு 3-00 பரிசு பெற்றவர்


## மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதங்களானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

## கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11

M/grs: SEENU & CO., POST BOX. 1636, MADRAS-1

கிளை: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யு. என். பியின் ஆறு வருட சதித்திட்டங்கள்

## திரிகோணமலைப் பிரதிநிதியின் பேச்சில் ஏரிக்கரை பத்திரிகையின் கயிறுதிரிப்பு

கடந்த மாதம் 25ந் திகதி முதன் முதலாக பாராளுமன்றத்தில் பேசுகையில் திருகோணமலைப் பிரதிநிதியும், தமிழரசுக் கட்சி உபதலைவர்களில் ஒருவருமான திரு என். ஆர். இராஜவரோதயர் அரசாங்கத்தின் நடைமுறைத் திட்டங்களை நன்கு அம்பலப்படுத்தினர். அவர் பேச்சின் கூடார்த்தம் புரிந்துகொள்ள முடியாத ஏரிக்கரைப் பத்திரிகைகள் விசேஷமாக "டெய்லிநியூஸ்" வெளியிட்ட செய்தியில் திரு இராஜவரோதயர் அரசாங்கக் கட்சியை ஆதரித்துப் பேசியதுபோல் தப்பர்த்தம் உண்டாகும்படி கருத்தைத் திருத்தி தடித்த எழுத்தில் பிரசுரித்திருந்தது. அது தமிழ் பேசும் மக்களிடையே பலத்த சந்தேகத்தை உண்டுபண்ணியிருப்பதாக நமக்கு வரும் கடிதங்களிலிருந்து அறியக்கூடியதாயிருக்கிறது. ஆகவே அரசாங்க ஹன்சாட் ஆங்கில வெளியீட்டிலிருந்து அவர் பேச்சை அப்படியே தமிழில் தருகிறோம்.

—ஆசிரியர்

சபாநாயகர் அவர்களே!


கஸ்டப்படும் கமக்காரரும் வறிய மீன்பிடிகாரரும் வாழும் ஓர் தொகுதியின் பிரதிநிதியாக நான் வந்திருக்கிறேன். இம்மக்கள் உள்ளதை உள்ளபடியே கூறுவதில் பெருமையடைபவர்கள் தந்திரமாகப்பேச இன்னும் கற்றுக் கொள்ளாதவன் என்ற முறையில் என் தொகுதிச் சூதற்ற மக்களைப் போலவே, நானும் பேசினல் நீங்களும் இச்சபையின் கௌரவ அங்கத்தவர்களும் என்னை மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இச்சபைக்கும் அரசியலுக்கும் புதியவன் என்ற முறையில் கனம் நிதிமந்திரி அவர்களுடைய வரவு செலவுத் திட்டப் பேச்சைக் கேட்க ஆவலோடு இருந்தேன் புலன்களை ஒருவழிப்படுத்தி அவர் பேச்சைக் கேட்டேன் இந்நாட்டுக்குப் புத்துணர்ச்சியூட்டிச் சமுதாய நலம் நாடும் ஓர் அரசாக நாடு முன்னேறுவதற்கு நல்வழி காட்டக்கூடிய வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளிவரும் என்று எதிர் பார்த்தேன். ஆனல் சபாநாயகர் அவர்களே—கனம் உள்நாட்டு மந்திரியைப்போல இல்லாததை இருப்பதாகக்காணக் கூடிய உள்ளறிவு எனக்கு இல்லாதபடியாலோ அல்லது இல்லாததை இருப்பதாக எண்ண மறுக்கும் பகுத்தறிவு இருப்பதினலோ—அவருடைய பேச்சு அர்த்தமற்றதாக எனக்குத் தொனித்தது. கல்லூரி அதிபர்கள் பரிசளிப்பு விழாக்களில் நடத்தும் பேச்சுக்களைப்போல விசேஷமற்றதாக இருந்தது. பழைய கல்லூரி அதிபராகிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி மந்திரியாருக்காகப் பரிந்து பேச முற்பட்டபோது எனது இக்கருத்து ஊர்ஜிதமாயிற்று.

எதிர்க் கட்சியிலிருந்து ஒவ்வொரு அங்கத்தவராக அரசாங்கத்தின் குற்றங்களை எடுத்துக்கூறிய வார்த்தைகளைக் கேட்டேன். குருவான்விளைப் பிரதிநிதி போன்ற ஒரு இராசதந்திரி—அரசாங்கத்தின் திட்டம்—ஆக்குவோன் இல்லாத ஓர் திட்டம் என்று கூறக் கேட்டு ஆச்சரியமடைந்தேன். அரசாங்கம் தனது ஆறு வருடத் திட்டத்தை அழகாக நடத்து வருகின்றது என்றே நான் கருதுகின்றேன் ஆறு வருடத் திட்டத்தின் ஒரு அம்சம் தானே வவுனியாப் பிரதிநிதி அவர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேறச் செய்ததென்று அவரைக் கேட்கிறேன்.

திரு சுந்தரலிங்கம்:— இலை.

திரு இராசவரோதயர்:— அரசியற் திட்டத்தின் அக்கிரமங்களைப்பற்றி அதிகம் பேசிய தமிழ்க் காங்கிரஸ் தலைவரை மந்திரி சபையிற் சேரவைத்தது ஒரு திட்டமல்லவா என்று அவரைப் பிரதிநிதியை கேட்கிறேன்.



திரு இராஜவரோதயர்

டாக்டர் பெரேரா:— அது திட்டமல்ல சதி

திரு இராசவரோதயர்:— இச்சபைக்கு இந்தியப் பிரதிநிதிகள் வராமற் செய்து அரசாங்கம் தனது ஆறு வருடத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டதா அல்லவா என்று இச்சபை அங்கத்தவர்களைக் கேட்கிறேன். அத்தனகல அங்கத்தவர் (திரு பண்டாரநாயகா) பித்துப் பிடித்தவர்போலாக் கட்டிட்டு அரசாங்க முதல் வரிசையை விடவேண்டி வந்த நேரத்தில் அதில் ஓர் திட்டம் இல்லையா? திரு டி. எஸ். சேனநாயகா காலஞ் சென்றபோது பிரதம மந்திரி பதவிக்கு போட்டி கிளம்பிய நேரத்தில் அங்கே ஓர் திட்டம் இருக்கவில்லையா? என்று எதிர்க்கட்சி அங்கத்தவர்களைக் கேட்கிறேன் இறுதியில் பத்து நாட்களுக்குமுன் காங்கேசன்துறைப் பிரதிநிதி (திரு நடேசன்) ஓர் மந்திரி பதவி பெற்றபோது இவர்களுடைய ஆறு வருடத் திட்டம் அங்கே பூர்த்தியாக வில்லையா என்று கேட்க விரும்புகிறேன். தனது திட்டத்தை அரசாங்கம் வெற்றிகரமாக நடத்திவிட்டதென்றே நான் கருதுகிறேன். இன்றிருக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் இந்நாட்டின் அரசாங்கத்தை நடத்துவதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. இந்நாட்டின் நலனுக்கேற்ற முறையில் அவர்கள் தமது திட்டத்தை நிறைவேற்றுவார்களென்று எதிர்பார்க்கிறேன். எமது இளம் பிரதமர் மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஓர் அரசு ஏற்படச் செய்வாரென்று எதிர்பார்க்கிறேன்.

திரு சுந்தரலிங்கம்:— அது வீண் நம்பிக்கை.

திரு இராசவரோதயர்:— இந்தியர் பிரச்னையைப்பற்றிக் குறிப்பிடாவிட்டால் நான் என் கடமையிற் தவறியவனவேன். வவுனியாப் பிரதிநிதி அவர்கள் கூறியதைப்போல இவ்விஷயத்தில் மனிதத்தன்மையோடு நடந்துகொள்ளும்படி நான் கனம் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தபால் செய்தி மந்திரி அவர்களும் நியமன அங்கத்தவர்களும் என்னை அரசியலில் வேட்டையாடுபவனென்ரே சந்தர்ப்பவாதி என்ரே கருதமாட்டார்களென்று நினைக்கிறேன். அவர்கள் பிரதம மந்திரியில் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு மோசம் செய்யப்படக்கூடாதென்பதே என் விருப்பம்.

கனம் தொழில் மந்திரி இந்தியர் பிரச்னையைப்பற்றிப் பேசினர். அவர் இவ்விவாதத்தில் கலந்துகொள்ளாவிட்டால் அரசாங்கத்திற்கு நன்மையாக இருந்திருக்கும். இந்தியத் தொழிலாளர்களுக்கு அரசியலைப் பற்றி ஒன்றுமே தெரியாதென்றும் அவர்களுக்கு உழைப்பைப்பற்றியும் உல்லாச வாழ்க்கையைப்பற்றியுமே கவலை என்றும் அவர் இச்சபையில் கூறினர். கனம் மந்திரி அவர்களைத் தோட்டப் பகுதிக்குச் சென்று அங்குள்ள ஏழைத் தொழிலாளரிடமிருந்து அரசியல் பாடம் படித்துக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(தொடர்ந்து திருக்கோணமலையில் செய்யப்பட வேண்டிய சில திருத்தங்களைப்பற்றிப் பேசிவிட்டுக் கோணேசர் ஆலயத்தைப் பற்றிப் பின்வருமாறு பேசினர்)

இப்பொழுது நான் திருகோணமலைப் பிரதிநிதி என்ற முறையில் அல்ல இந்து என்ற முறையில் பேசுகிறேன் கனம் பிரதம மந்திரியை என் வேண்டுகோளைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் இந்நாட்டில் இந்துக்களுக்கு இரண்டு பரிசுத்த தலங்கள் இருப்பது அங்கத்தவர்களுக்குத் தெரியும் ஒன்று திருக்கேதீஸ்வரம், மற்றது கோணேஸ்வரம் கோணேசராலயத்தை மறுபடியும் கட்டும்பொருட்டு ஒரு ஏக்கருக்கும் குறைந்த ஓர் நிலத்தைக் குத்தகைக்குத் தரும்படி இரண்டு வருடங்களுக்கு முன் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தோம். ஓர் பெரிய இந்துவென்று

(12ம் பக்கம் பாக்க)


# தொழில் ஸ்தாபனங்கட்குத் தேவையான ஸ்ரோர் சாமான்கள்




தோட்டக் கருவிகள்
ஆயுதங்கள்
பம்ப் வகைகள்
கட்டிட சாமான்கள்
சீமேன்ற், யந்திரங்கள்
இருப்பு சாமான் வகைகள்
கரத்தைப் பூண்கள்
கரத்தைப்பட்டங்கள்
திருக்கல் கரத்தைஅச்சுகள்
பறுசுகள்
தீந்தை வகைகள்



## வேலை ஸ்தலப்

செப்ப இரும்பு வார்ப்புகள் யந்திரங்கள் பழுது பார்த்தல் தண்ணீர் பைப் லைன் வேலைகள் இரும்பு கேட்டர் வேலைகள்


உங்கள் பொருள்கள் சகாயமான விலைக்கும் வேலைகள் தேவைக்கேற்றவாறு குறைந்த விகிதத்திலும் தாமதமின்றி முடித்துக் கொடுக்கப்படும்.




181

## உங்கள் தேவையை அறிவியுங்கள்.







## சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட்

கொழும்பு - 12 P. O. BOX 46

கிளைக்கந்தோர்:— ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்

591


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(தொடர் நவீனம்)

## விதியின் விசித்திரம்

சுர்தரத்தின் பெயரை எப்பொழுதோ கேட்டதாக டக்ளஸ் துரைக்கு ஞாபகமிருந்தது. ஆனால் எங்கே, எப்பொழுது, யாரால் அப்பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டதென்பதை எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியவில்லை. மாயாண்டி, சொள்ளை முத்து, கணபதி, மருதை, சப்பாணிபோன்ற பெயர்களாயிருந்தால் யாரேனும் தொழிலாளியின் பெயராக இருக்குமென்றெண்ணி அதைப்பற்றி ஊன்றிச் சிந்திக்காமல் விட்டிருப்பார் டக்ளஸ். இந்தப் பெயர் அவருக்குப் புதுமையானதாகவும் முன்பு எப்பொழுதோ அப்பெயரைத் தாம் கேள்விப்பட்டிருப்பதாகவும் அவருக்குப் பட்டதால் ஆழ்ந்து சிந்திக்கலானார். வெகுநேரம் யோசித்த பின்னர் அன்றொருநாள் தான் பிரேமாவதி வீட்டிலிருக்கையில் கருப்பண்ணன் கங்காணி அங்கு வந்ததும் சுந்தரம் என்னும் பையன் ஒருவனுக்கு துரையிடம் சிபார்சு செய்து எஸ். டி. உத்தியோகம் வாங்கிக் கொடுக்கும்படி கேட்டதும் ஞாபகம் வந்தது. இவன் அதே சுந்தரமாக இருந்தால் சுந்தரத்துக்கு பிரதிஉபகாரம் செய்ததாகவும் இருக்கும், கருப்பண்ணனின் ஆசையை நிறைவேற்றியதாகவும் இருக்குமென்றெண்ணினார் டக்ளஸ்.

அவர் சுந்தரத்தைப் பார்த்து உமக்கு கருப்பண்ணன் கங்காணியைத் தெரியுமா? அவர்தான் இத்தோட்டத்துப் பெரிய கங்காணி என்றார்.

அப்பொழுது சுந்தரமும் கருப்பண்ணன் கங்காணியின் நினைவிலேயே லயித்திருந்தான். கருப்பண்ணன் கங்காணிக்கு கடமைப்பட்டு அவருடைய மகள் மீனாட்சியை மனைவியாக ஏற்றுக்கொள்ள மனமின்றிப் பெற்றோரையும் வீட்டையும் விட்டு வெளியேறிய தன்னை மல்லிகைத் தோட்டத்துக்கே கொண்டு வந்து சேர்த்த விதியின் விசித்திரப் போக்கை எண்ணி பெருமூச்சுவிட்டான். கருப்பண்ணன் கங்காணியைப் போய்க் காண்பதா? அல்லது காணாமலே இருந்துவிடுவதா? அகஸ்மாத்தாக சந்திக்க நேர்ந்தால் அவருடன் எப்படிப் பேசவேண்டும் என்றெல்லாம் சிந்தித்துக்கொண்டிருக்கையில், டக்ளஸ் துரையே கருப்பண்ணனைப் பற்றிப் பிரஸ்தாபித்ததும் சுந்தரத்துக்கு தூக்கிவாரிப் போட்டது. துரையின் கேள்வியை அவன் விகற்பமாக எண்ணவில்லை. தானும் ஒரு கங்காணியின் மகனாக இருப்பதால் இந்தக் கங்காணியைத் தெரிந்திருக்கக்கூடுமென்று எண்ணுவது சகஜம்தானே என்று கருதினான்.

“அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பார்த்ததாக ஞாபகமில்லை” என்று துரையின் கேள்விக்கு சுந்தரம் பதிலளித்தான்.

“உமது பங்களா தயாராக கொஞ்சம் நாள் செல்லும். அதுவரை உமக்கு எனது பங்களாவில் ஒரு அறை ஒழித்துத் தருகிறேன். அதில் நீர் தங்கியிருக்கலாம். சாப்பாட்டை கருப்பண்ணன் வீட்டில்தான் வைத்துக்கொள்ள வேண்டும்” என்றார் துரை.

கருப்பண்ணன் வீட்டில் சாப்பாடு வைத்துக்கொள்ளும் யோசனை சுந்தரத்துக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதைத் துரையிடம் சொல்ல விரும்பாதவனாக “தாங்ஸ்” என்ற ஒரு வார்த்தையுடன் பேச்சை முடித்துக்கொண்டான்.

டக்ளஸ் துரை ஒரு ஆளை அனுப்பி கருப்பண்ணனை பங்களாவுக்கு வரவழைத்தான். கருப்பண்ணன் வந்ததும், “இவர்தான் நீ சொன்ன சுந்தரம். இவரைத்தான் சின்னத்துரையாக நியமித்திருக்கிறேன். கொஞ்ச நாளைக்கு என்னுடன் இந்த பங்களாவிலேயே இருக்கட்டும். சாப்பாடு மாத்திரம் உன் வீட்டில் வைத்துக்கொள்ளட்டும். தனியாள்தானே! இன்னும் கல்யாணமாகவில்லையல்லவா?” என்று கூறி துரை லேசாக சிரித்தார்.



“தம்பி சுந்தரம்! இதை உங்களுடைய வீடாகவே எண்ணவேண்டும் மூன்று வேளையும் சங்கோசமில்லாமல் வந்து சாப்பிட்டுப் போகலாம்”

சுந்தரம் மௌனமாக தலைகுனிந்து நின்றான். கருப்பண்ணன் சுந்தரத்தை ஒருதடவை ஏறஇறங்கப் பார்த்துவிட்டு “சின்னப் பையனாக இருக்கும்போது பார்த்ததுதானுங்க. படிப்பதற்கு பட்டணம் போன பிறகு பார்க்கலைங்க” என்று துரையிடம் கூறிவிட்டு, சுந்தரத்தை நோக்கி, “தம்பி! நீங்க மாரிமுத்து கங்காணி மவன்தானே! வாறதாக எனக்கொரு லெட்டர் போட்டிருக்கலாமே!” என்று கூறினார்.

“பட்டணத்திலேருந்து வந்ததும் அப்பா எல்லா சமாசாரமும் சொன்னாரு. லெட்டர் எதுக்கு, நேரிலே போயிட்டா போச்சு என்றெண்ணிப் புறப்பட்டு வந்தேன்” என்றான் சுந்தரம்.

“வெயிலுக்கு முந்தி நான் மலைக்குப் போகணும். நீ சுந்தரத்தை உன் வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு போ!” என்று டக்ளஸ் கருப்பண்ணனிடம் கூறினார்.

கருப்பண்ணன் “சரீங்க” என்று கூறிப் புறப்பட ஆயத்தமானார்.

துரை சுந்தரத்தை நோக்கி, “மிஸ்டர் சுந்தரம்! இரண்டு நாளைக்கு நீர் ‘ரெஸ்ட்’ எடுத்துக்கொள்ளும். அதற்குப் பிறகு உத்தியோகத்தை பாரமெடுக்கலாம்” என்றார்.

சுந்தரம் துரையிடம் விடைபெற்றுக்கொண்டு கருப்பண்ணனுடன் அவருடைய வீட்டுக்குச் சென்றான்.

கருப்பண்ணனுக்கு தனது எண்ணம் இவ்வளவு சுலபமாகவும் இவ்வளவு விரைவாகவும் நிறைவேறிற்றே என்று ஒரே [illegible] செய்தார். தம்பி! தம்பி! என்று குழைந்து குழைந்து பேசினார். “பரீட்சை பாஸாகுமா?” என்று கேட்டார். “ரிசல்ட் எப்போ வரும்?” என்று கேட்டார். தனது சாமர்த்தியத்தைப் பற்றியும், தனக்கு இருக்கும் செல்வாக்கைப் பற்றியும் தான் சேர்த்து வைத்திருக்கும் பணத்தைப்பற்றியும் வாங்கிவிட்டிருக்கும் காணி பூமிகள் மாடு கன்றுகளைப் பற்றியும் கொல்லையில் பயிரிட்டிருக்கும் கத்தரி தக்காளி வகையராக்களையும் பற்றியும் ஒரு நீண்ட பிரசங்கமே செய்தார்.



இவ்வளவு நேரமும் இல்லாத வெட்கம் இப்பொழுது எங்கிருந்தோ வந்து மீனாட்சியின் பிடரியைப் பிடித்து அமுக்கி நிலத்தைப்பார்க்கும்படி செய்தது

முடிவில் மீனாட்சியின் பேச்சை எடுத்தார். “எனக்கு ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு என்று அவ ஒருத்திதான. எனக்கும் வயசாயிருச்சு. நான் திடீரென்று ஒரு நாளைக்கு கண்ணை மூடிட்டா அவ அந்தரிச்சுப் போவா பாரு! இத்தனை காலமும் இங்கே இருந்துபுட்டு இனிமே இந்தியாவுக்கு போகவும் மனசில்லை. தெரியாம கொஞ்சம் நிலபுலங்களையும் வாங்கிவிட்டுட்டேன். இதையெல்லாம் இனி வித்துக் காசாக்கிகிட்டு கிளம்புறதென்றாலும் லேசான வேலையா? இந்தியாவுக்குப் போனா மீனாட்சியின் அழகுக்கும் குணத்துக்கும் நான் தேடி வைத்திருக்கிற தோட்டத்துக்கும் ஜில்லா கலெக்டர்கள்கூட போட்டிபோட்டுக் கொண்டு வருவாங்க. இந்த ஊரிலே நம்ப ஜாதி சனத்திலே படிச்சவங்களும் உத்தியோகத்தர்களும் ரொம்பவும் குறைச்சல். அவளை ஒரு நல்ல இடத்தில் கொடுக்க வேண்டுமென்று எனக்கொரு ஆசை. உங்க அப்பாவும் நானும் சின்ன வயசிலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். அதோடு அவர் கல்யாணம் செய்த வழியில் எங்களுக்கு கொஞ்சம் உறவும் இருக்கிறது. அதுதான்.........” என்று கங்காணியார் நீட்டி முழக்கிக்கொண்டு போனார்.

அப்பொழுது எட்டுக்கட்டை சுருதியில் பாரோ “அப்பா! அப்பா!” என்று கூப்பிடும் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு இளம் பெண் அள்ளிச் சொருகிய கொண்டையும் அழுக்குப்படிந்த ஆடையுமாக சுந்தரமும் கருப்பண்ணனும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தாள். அப்பெண் சுந்தரத்தைக் கண்டதும் ஏதோ காணாத பொருளைக் கண்டவளமாதிரி தனது பெரிய கண்களை இன்னும் பெரிதாக்கி அவனையே உற்று நோக்கியவண்ணம் கங்காணிக்குப் பின்னால் போய் நின்றாள்.

“வா அம்மா மீனாட்சி இவ்வளவு நேரமும் எங்கே போய் இருந்தாய்? இவர் யார் என்று தெரியுமா? கிரீன் எஸ்டேட் மாரிமுத்து மாமாவைத் தெரியுமோ இல்லையோ?........” என்று கங்காணியார் முடிப்பதற்குள் “பட்டணத்திலே படிச்சிண்டிருந்தாரே” என்று அந்தப் பெண் ஆரம்பித்தாள்.

“ஆமா அம்மா! அந்த மாமாவின் மகன் சுந்தரம் தான் இவர். நம்ப தோட்டத்துக்கு சின்னத் துரையாக வந்திருக்கிறார். தம்பி சுந்தரம்! இவள்தான் எனது மகள் மீனாட்சி” என்று கருப்பண்ணன் இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இவ்வளவு நேரமும் இல்லாத வெட்கம் இப்பொழுது எங்கிருந்தோ வந்து மீனாட்சியின் பிடரியைப் பிடித்து அமுக்கி நிலத்தைப் பார்க்கும்படி செய்தது. அவள் தலைகுனிந்து கால்கட்டை விரலால் நிலத்தில் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். சுந்தரத்துக்கு என்ன பேசுவது என்ன செய்வதென்றே தோன்றவில்லை. மீனாட்சியின் வருகையால் அவனுடைய மனதில் எவ்வித மாற்றமும் உண்டாகவில்லை. தோட்டக்காடுகளில் உடம்பொடிய வேலை செய்யும் லட்சக்கணக்கான இளம் பெண்களின் நினைவுதான் அவனுக்கு வந்தது. கருப்பண்ணனிடம் கொஞ்சம் பணமிருப்பதால் மீனாட்சி வேலைக்குப் போகாமல் வீட்டில் வீண்பொழுது போக்குகின்றாள். மற்

[ 9-ம் பக்கம் பார்க்க ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேபனை மனு

## உரியகாலத்தில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது

## புதிய குற்றச்சாட்டையும் அத்தோடு சேர்க்கலாம்

## திருத்த மனுவின் மீது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

கைத்தொழில் மந்திரி திரு ஜி ஜி. பொன்னம்பலம் கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் பிரதிநிதியாகத் தெர்வு செய்யப்பட்டதை ஆட்சேபித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஸி. ஜே. சின்னப்பாவும் எஸ் குணசிங்கமும் ஒரு தேர்தல் மனுவை சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

இந்த மனுவோடு மேலும் சில குற்றச்சாட்டுகளைச் சேர்க்க மேற்படி மனுதாரர்கள் சுப்ரீம் கோர்ட்டாரிடம் அனுமதி கோரினர்.

தேர்தல் செலவுகள் சம்பந்தமாக திரு ஜி. ஜி. பொன்னம்பலம் சமர்ப்பித்திருக்கும் கணக்குகளில் உண்மையில்லாத கணக்குகளையும் திரு பொன்னம்பலம் சேர்த்திருக்கிறார் என்பதே புதியகுற்றச்சாட்டாகும்.

இந்தக் குற்றச்சாட்டைச் சேர்க்க முடியாதென திரு பொன்னம்பலம் ஆட்சேபித்தார். ஆனால் நீதி அரசர் திரு குணசேகரா குற்றச்சாட்டை அனுமதித்து திங்கட்கிழமை தீர்ப்பளித்தார்.

தேர்தல் ஆட்சேபனை மனு உரியகாலத்தில் தாக்கல் செய்யப்படவில்லையென்றும், இப்புதிய திருத்தம் தேர்தலை ஆட்சேபிக்கக்கூடிய ஒரு குற்றச்சாட்டல்லவென்றும், திருத்தம் கோரும் மனு உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படவில்லையென்றும், ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும் ஜாமீன் தொகை புதிய குற்றச்சாட்டுக்கும் சேர்த்துப்போதுமானதல்லவென்றும், ஆகவே அதிகப்படியான குற்றச்சாட்டைச் சேர்க்க அனுமதிக்ககூடாதென்றும் பிரதிவாதியின் (திரு பொன்னம்பலம்) சார்பில் வாதிக்கப்பட்டது.

தேர்தல் முடிவு கெஜட்டில் பிரசுரமாகி 21 நாட்களுக்குள் தேர்தல் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்படவேண்டுமென்று சட்டம் கூறுகிறது.

ஜூன் 2 ந் தேதி யாழ்ப்பாணம் தொகுதித் தேர்தல் முடிவு அரசாங்கக் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது. ஜூன் 23 ந் தேதி தேர்தல் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டது. தேர்தல் முடிவு கெஜட்டாகி 21 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யப்பட்டுவிட்டதென்றும், 21 நாட்களைக் கணக்கெடுக்கும்போது ஜூன் 2 ந் தேதியை அதோடு சேர்க்கக்கூடாதென்றும் மனுதார் சார்பில் வாதிக்கப்பட்டது.

### குறிப்பிட்ட காலம்

மனுவை அனுமதித்து நீதிபதி அவர்கள் தனது தீர்ப்பில் கூறியதாவது:—

சட்ட விதிகளின்படி தேர்தல் முடிவு கெஜட்டில் பிரசுரிக்கப்பட்ட தினம் சேர்க்கப்படக்கூடாதென்று மனுதாரின் வழக்கறிஞர் திரு குமாரகுலசிங்கம் கூறுவதில் போதுமான நியாயம் இருக்கிறது.

தேர்தல முடிவு பிரசுரிக்கப்பட்ட தினமும் மனு தாக்கல் செய்யப்படவேண்டிய காலவரையறைக்குள் அடங்கியதென்பதுதான் சட்டத்தின் கருத்தென்றும் ஆகவே சட்டப்படி 21 தினங்களுக்குள் மனுதாக்கல் செய்யப்படவில்லையென்றும் எதிர் மனுதாரின் வழக்கறிஞர் திரு பெரேரா வாதித்தார்.

### உரிய காலத்தில்

குறிப்பிட்ட காலம் எந்தத் தினத்திலிருந்து ஆரம்பமாகிறதென்பதல்ல பிரச்னை — ஆனால் சரியாக நாட்களைக் கணக்கெடுக்கும்போது அது என்று முடிவடைகிறதென்பதுதான்.

21 நாட்களைக் கணக்கெடுக்கும்போது கெஜட்டில் தேர்தல முடிவு வெளியான தேதி அத்துடன் சேர்க்கப்படக் கூடாதென்பதுதான் எனது அபிப்பிராயம். ஆதலால் தேர்தல் ஆட்சேபனை மனு உரிய காலத்தில் தாக்கல செய்யப்பட்டுவிட்டது. தேர்தல் முடிவு கெஜட்டில் பிரசுரமாகி 31 நாளைக்குள் தேர்தல் செலவுகள் சம்பந்தப்பட்ட கணக்கு விபரங்களை அபேட்சகரின் ஏஜண்ட் தேர்தல் அதிகாரிக்கு சமர்ப்பித்துவிடவேண்டும். தேர்தல் செலவு சம்பந்தமாக உண்மையற்ற கணக்கு விபரம் சமர்ப்பிக்கப்பட்ட ஊழல் நடவடிக்கையொன்றே தேர்தல் செல்லுபடியாகாதென்று முடிவுசெய்வதற்கு போதிய காரணமாகவும் இருக்கமுடியும். பிரிட்டிஷ் தேர்தலில் இக்காரணத்தின்மீது தேர்தல் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன

திருத்தம் சோரும் மனுவும் காலாகாலத்தில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டதென்று குறிப்பிட்ட நீதிபதி அவாகள் ஜாமீன் தொகை போதுமா, போதாதா எனபதைப் பற்றிக் கூறியதாவது:—

### குற்றச் சாட்டுகளின் எண்ணிக்கை

"தேர்தல் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டு மூன்று தினங்களுக்குப் பிறகு அதிகப்படியான புதிய குற்றச்சாட்டுகளைச் சேர்ப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டென்பதும், நீதிபதியின் அனுமதியுடன் சேர்க்கப்படும் அக் குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லையென்பதும் தெளிவு

இச் சந்தர்ப்பத்தில் அதிகப்படியான ஜாமீன் தொகை கட்டப்படவேண்டுமென்ற சட்ட விதியொன்று கிடையாது என்று திரு பெரேரா கூறுவது உண்மையானால், புதிய குற்றச்சாட்டுகளுக்காக ஜாமீன் தொகை அவசியமில்லையென்பதும், புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்படலாம் அல்லது புதிய குற்றங்கள் செய்யப்படலாமென்று எதிர்பார்த்து, கட்டப்பட்டும் ஜாமீன் தொகையினால் புதிய குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தமுடியாதென்பதும்தான் அதன் அர்த்தமென்று நான் கருதுகிறேன்.

ஆகவே தேர்தல் ஆட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட்டு மூன்று தினங்களுக்குப் பிறகு அதிகப்படியான ஜாமீன் தொகையைக் கட்டமுடியாதென்று கூறுவதை ஆலோசிக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை.

திருவாளர்கள் வி. நவரத்தினம் ஜே வி ஸி நேதேனியல், ஏ. வைத்திலிங்கம், ஜி டி. சமரவிக்கிரம, பீ. சோமதிலகம் ஆகியோருடன் திரு ஸி எஸ் பார்குமாரகுலசிங்கம் மனுதார் சார்பாகவும், திருவாளர்கள் பி கனகசபை, எச். வனிகதுங்க. ஈ. பி விக்கிரமநாயக்கா கியூ ஸி., என். கே. சொக்ஸி கியூ. ஸி., ஆகியோருடன திரு எச் வீ. பெரேரா கியூ ஸி. எதிர் மனுதார் சார்பாகவும ஆஜரானார்கள்.

### நெடுந்தீவில் தண்ணீர் வினியோகம்

அதிக வரட்சியினால் குடி தண்ணீர் இன்றிக கஷ்டப்பட்ட நெடுந்தீவு மக்கடகு அரசாங்கத்தார் இலவசமாய் நன்னீர் வினியோகம் செய்துவருகின்றனர். ஏனைய இடங்களிலும்பார்க்க நெடுந்தீவிலே வரட்சி அதிகம்.

## தமிழ் சுருக் கெழுத்தாளர் பரீட்சை மீது மாணவர் வெறுப்பு

### அரசாங்கத்தின் அசிரத்தையால் ஏற்பட்ட விளைவு

தமிழிலும், சிங்களத்திலும் சுருக்கெழுத்தாளர்களை சிருஷ்டிக்கும் முகமாக அரசாங்கம் நடத்திய தெரிவுப் பரீட்சையில் மொத்தம் 38 பேர்களே தேர்ச்சியுற்றிருப்பதாகவும், அதில் 13 பேர் மட்டுமே தமிழ் பகுதிக்காக தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

தெரிவு செய்யப்பட்ட அந்த 13 பேரிலும் 10 பேர்களே வகுப்புகளுக்கு சமூகமளிக்கிறார்கள். இவர்களில் 5 பேர் தமிழர்கள். 5 பேர் முஸ்லிம்கள். இலங்கையின் தேசிய பாஷைகளான தமிழும், சிங்களமும் அரசாங்க அலுவலகங்களில் முதன் மொழியாக அமரப்போகின்றன அதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டுவிட்டன, 1957 ல் நிச்சயம் அரசகரும மொழிகளாக இரு பாஷைகளும் வந்தே தீரப்போகின்றன என்று அரசாங்கம் இடைவிடாத பிரசாரம் செய்தும், தேசிய பாஷை சுருக்கெழுத்தாளர் வேலைக்கு மிகக் குறைந்தவர்களே மனுப்பண்ணியிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

தமிழ் பகுதிக்காக முழு இலங்கையிலும் மொத்தம் 47 பேர்களே மனுப்பண்ணியுள்ளார்களெனின் அந்த வேலைமீது அவர்களுக்கு இருக்கும் பாராமுகம் எவ்வளவென்பது எளிதில் புலனாகிறது. அதே சமயத்தில் ஆசிரிய கலாசாலை தெரிவுக்கான பரீட்சைக்கு பிரதி வருடமும் ஆயிரக்கணக்கான மனுக்கள் குவிந்துகொண்டிருக்கின்றன.

மாணவர்களின் இந்த வெறுப்புக்கு அரசாங்கத்தின் நடைமுறைப் போக்குத்தான் காரணமென்றும் சொல்லப்படுகிறது. அதாவது ரேடியோ சிலோனில் கடமை பார்க்கும் தமிழ் சுருக்கெழுத்தாளர்கள அனைவரும் தினச் சம்பளத்திலேயே கடமை பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். மாதச் சம்பளம் பெறுவோராக அவர்களை அமர்த்திக் கொள்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அதே சமயத்தில் ஆங்கில சுருக்கெழுத்தாளர்கள் மாதச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களாக கடமையாற்றுகிறார்கள் இந்தக் காரணத்தினால் நேரத்தையும், காலத்தையும் தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையத்தில் செலவு செய்வதை பல மாணவர்கள் வெறுக்கிறார்களென்று தெரியவருகிறது

### விளம்பரம் போதாது

இந்த முக்கியத்துவம் வாய்ந்த பரீட்சைபற்றி அரசாங்கம் நாட்டில் செய்த விளம்பரம் போதாதென்றும் வேறு குற்றம் சாட்டப்படுகிறது.

ஒரு சில பத்திரிகைகளிலில் மட்டும் விளம்பரம் செய்துவிட்டு அந்த விளம்பரங்களிலும் இந்தப் பரீட்சையில் தேறினால் வேலை கொடுப்போமென்று அரசாங்கம் உறுதியளித்திருக்கவில்லையென்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

### ஜப்பானில் ரகசிய வட கொரியப் படை

'டோக்கியோ—

ஜப்பானில் 5 டிவிஷன்கள் கொண்ட ரகசிய வட கொரிய ராணுவம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக "டோக்கியோ ஷிம்பு" என்ற பிரபல பத்திரிகை கூறுகிறது

ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

சபலா, லோ பீடிகளுக்குத் தேவையான நாகப்பூர், சிங்களணி இலைகளும், ஆக்ரா நூபாண புகையிலைகளும் சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. பி. விசேஷமாய்க் கவனிக்கப்படும்.

கமலா ஸ்டோர்ஸ்

Proprietor S. V. பொன்னம்பலம்

16, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 3597. தந்தி: தாமரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீ ஏற்றிய விளக்கு!"

கே. எஸ். முகம்மது தாவூது

"வா! வா! தம்பி ரபீக்கா? எப்ப வந்தே? சௌக்கியமா வந்து சேந்தியா? உன்னை கண்டதும் என் வயிறு குளிர்ந்து போச்சு"

"என்ன வெகு குஷியா இருக்கிங்களே வீட்டிலே விசேஷமோ?"

"அப்படி ஒண்ணும் பெரிசா இல்லே இப்படி உக்காரு. இன்னிக்கு குழந்தைக்கு பேர் வைச்சோம்"

'எந்த குழந்தை......உங்கள் மகளுடையது தானே?'

"ரபீக தெரியல்லே! இது தான் 'நீ ஏற்றிய விளக்கு!' நம்ம பரீதாவின் குழந்தை",

'ஊ ஹூம்...............'

"சரிதான்! உனக்கெப்படி தெரியும் அப்ப நீ ஸபரில் இருந்தே" இவ்விதம் பரீதாவின் பாட்டியும் ரபீக்கும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள் இதற்கிடையில் சிற்றுண்டியும் தேநீரும் முன்னுக்கு வந்து விட்டன.

"நான் தேநீர் அருந்திய பிறகு வேறு தேநீர் அருந்துவதில்லை" என்று ரபீக்கு எவ்வளவோ மறுத்தும் கேட்பதாக தெரியவில்லை இதைவிட்டு எப்படி வெளியேறுவது என்று எண்ணிக் கொண்டிருந்த ரபீக்கு—அவன் நண்பன் வாசலில் வந்து நின்று கூப்பிட்டதும் நல்ல சமயமென்று 'அவசியமான காரியம் சொல்லி வருகிறேன்' என கூறி விட்டு வெளியேறினான்.

"பரீதா! என்ன புள்ளே நீயாவது ஒரு வார்த்தை தேநீர் குடித்துவிட்டு போகும்படி சொல்லக்கூடாது?' என்று பரீதாவின் பாட்டி கடிந்து கொண்டாள்.

❀

மேற்படி சம்பாஷணை எப்படியோ உள்ளே படுத்திருந்த உசேனின் காதில் விழுந்தது அன்றிரவு வழக்கத்துக்கு மாறாக பரீதாவின் கணவன் உஸேன் சாப்பிடாமல் மஞ்சத்தில் படுத்துக் கொண்டு கடும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவன் எண்ணம் பரீதாவுக்கும் ரபீக்குக்கும் பழைய தொடர்பு அதாவது காதல்—கீதலென்று கதை நடந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த சிறுக்கி அவனைபற்றி எப்போதும் ஒரு அக்கறையோடு ஒரு பரிவோடு பேச வேண்டியதில்லை என்று தப்பான எண்ணம் எல்லைப்புற மெயில்போல் போய்க் கொண்டிருந்தது வெகு நேரமாகியும் அவன் மனம் ஒரு எல்லையில் நிற்காமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. விர்ரென்று சிகரட் எடுப்பதற்காக எழுந்தான் உஸேன் அவசரத்தில் பரீதாவின் அலமாரிதான் திறபட்டது. அப்போது அவன் கையில் சிக்கியது சிகரட் அல்ல. ரபீக்கின் பாஸ்போட் சைஸிலுள்ள போட்டோதான். அதை அவன் ஊன்றிப் பார்த்தான். அந்த பார்வையில் கண்கள்—வெளியில் வந்து விழுபவை போலிருந்தன. தன் கண்களை நம்ப முடியாதவன்போல் முழித்தான் கடைசியில் ஒருவாறு இது ரபீக்குடையதுதான் என்று அடையாளம் கண்டுகொண்டான் மீண்டும் மஞ்சத்தில் படுத்துக் கொண்டு

அச்சமயம் பரீதாவின் காலடி சத்தம் கேட்டது. தனக்கு உடம்பு—சௌகரியமில்லை என்று கூறி சாப்பாட்டை நிறுத்தி காப்பி சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொண்டான். காலையில் எழுந்த உஸேன் சொந்த ஜோலியாக வெளியூர் சென்று விட்டான்.

❀

ஒரு வாரம் கடந்துவிட்டது இரவு 8 மணி இருக்கும் வெளியூரிலிருந்து உஸேன் வந்தான். பரிதா சாப்பாட்டை ஆயத்தப் படுத்தி வைத்தாள். உஸேனோ—அதை எதிர் பார்த்தவனாகவோ அல்லது பொருட் படுத்தியவனாகவோ தெரியவில்லை. ஷூட்கேஸில் துணிமணிகளை திணித்துக்கொண்டு வெளியேற எத்தனித்தான், வழக்கத்துக்கு மாறான இச்செய்கையை கண்ட பரிதாவின் உள்ளம் தூக்கிவாரிப் போட்டது. உதடு படபடவென்று அடித்துக் கொண்டது. உடம்பெல்லாம் சிலிர்த்துவிட்டது "வெளியேற எதற்காக எத்தனிக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

"நீயும்—ரபீக்கும் நடத்திய கபட நாடகமெல்லாம் அம்பலமாகிவிட்டது. உன் ஜாலமெல்லாம் என்னிடம் செல்லாது இனி என் முன் நிற்க கூட நீ அருகதையற்றவள்" என்று சீறினான். அதில் கோபத்தின் வேகம் தொனித்தது. பேதை பரீதா என்ன செய்வாள்? திடுக்கிட்டு விட்டாள் அல்லாஹ் துணை நிற்பான் என்ற பரீதாவின்—நம்பிக்கைக்கு உஸேன் படிந்து விட்டான். தன்மீதுள்ள சந்தேகத்தை நிவர்த்திபண்ணிக் கொள்ள வாய்த்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டாள் பரீதா.

கலங்கிய கண்களுடன் பரீதா கூறலானாள்:

"ரபீக்கு எங்களுக்கு எட்டிய பந்து. ஆனாலும் நெருங்கிய தொடர்பு உண்டு எனக்கு ஐந்து வயது இருக்கும்போது என்னை ரபீக்குக்கு கேட்டார்கள். அப்போது ரபீக் வீட்டார் கை கொஞ்சம் சளைத்துப்போய் இருந்தது எங்கள் பந்துக்களுக்கும், என் தந்தைக்கும் அது பிடித்தமில்லை எனினும் ரபீக்கின் அழகையும், புத்தி தீட்சண்யத்தையும் கண்ட என் தாயார் ரபீக்கு என்னை மணம்முடித்து வைப்பதாக வாக்கு கொடுத்து விட்டார்கள் என் தந்தையுட்பட பந்துகளனைவரும் என் தாயாரின் எண்ணம் ஈடேறாமல் செய்ய நினைத்து "இந்த சம்பந்தம் நடைபெறுவதை பார்க்கிறோம்" என்று சபதம் கூறினார்கள் இதை என் தாயார் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை வேலியே பயிரை மேய அனுமதித்ததுபோல் இறைவனும் என்னை வருத்த சிக்க எண்ணி என் தாயை பறித்துக் கொண்டான்

போது "ரபீக்குக்கே பரீதாவை கட்டிக் கொடுக்க வேண்டும் இதை அலட்சியம் செய்ய வேண்டாம்" என்று என் பாட்டியிடம் சொன்னார்கள்

என் தாயார் இறந்தபின் என் தந்தை மறுமணம் செய்து கொண்டார் லாகிரி வஸ்துக்களும் பாவிக்க தொடங்கிவிட்டார் அந்த வகையில் கிடைத்த அபின் கூட்டாளியின் மகனுக்கு என்னைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டார் என் பாட்டிக்கு அந்த சம்பந்தம் கட்டோடு பிடிக்கவில்லை ரபீக்கும் நானும் சிறுசு முதல் ஒன்றாக பழகி வந்தோம் மண விளக்கம்பற்றி ஒன்றுமே அறியமாட்டேன் எனினும் ரபீக்கின் மீது ஒரு தனி அன்பு மட்டும் என் மனதில் இடம் பெற்று நின்றது. இதனால் பிறரெவரையும் மணந்து கொள்ள முடியாதென்று ஒரே பிடியாய் நின்றேன். என் பாட்டியும் என் பக்கம். ஆனால் காரியம் கை கூடவில்லை. வலுவந்தமாக தாலியை கட்டிவிட்டனர் அப்போது எனக்கு வயது பதிமூன்று; பெரிய மனுஷியாகவுமில்லை. தாலிகட்டியதைத் தவிர அந்த பாதகனின் முகத்தை ஏறிட்டு பார்ப்பதுமில்லை. குடிவெறியில் நான் பணியாவிட்டால் அப்படி இப்படி எல்லாம் செய்வேன் என்று திட்டி செல்வது வழக்கமாகிவிட்டது. நான் பெரிய மனுஷியானால் சரியாகிவிடுமென்று எதிர்பார்த்தார்கள். அந்த நினைப்பும் கனவாகிவிட்டது நான் பெரிய மனுஷியாகி மூன்று வருடங்களும் பறந்து சென்றன. என் மனம் இன்பக் கனவுகளைக் கண்டு ஏங்கித் தவித்தது. அந்த பாதகன் என்னைவிடுதலை செய்வதாகவுமில்லை. அவன் வார்த்தை சொல்லாமல் என்னை மறுமணம் செய்விக்கமுடியாதாம். அதற்கு 'பத்வா' வாங்கிவைத்துமிருக்கிறானாம்' என்ற செய்தியை கேட்டு இடிந்து விட்டேன். என் பாட்டியும் மனமுடைந்து விட்டாள். நான் இந்த உலகமே வஞ்சித்துவிட்டதாக எண்ணினேன். இஸ்லாம் என்னை பலி தீர்த்துவிட்டதாக கருதினேன். இந்த உலகை கைவிட தீர்மானித்துவிட்டேன் பாட்டிக்கு அறிவிக்க எண்ணினேன். ஒரு கடிதம் எழுதினேன். ஆனால் அந்த கடிதத்தை நான் வைத்த இடத்திலிருந்து

கள். அது காணாமல் போய் விட்டது.

❀

இரு வாரங்கள் கழிந்து விட்டன. இரவு மணி 7 இருக்கும்—ஊர் நாட்டாண்மை, பஞ்சாயத்து கமிட்டி மெம்பர்கள்; மாடிவீட்டு மஹ்மூது; புது பணக்கார புகாரி; இன்னும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களில் பலரும் வந்திருந்தார்கள். இவர்கள் ஒருவரோடு ஒருவர் காதோடு முகம்வைத்து கதைத்துக் கொண்டனர். "பெண்ணுக்கு புருஷனோடு வாழ இஷ்டமிருந்தால் தம்பி ரபீக்கு! இந்த ஏற்பாடெல்லாம் வீணாகி பாவமும் பழியும் உன் தலையில் தான் விழும். நீ சிறு பிள்ளை" என்று மாடி வீட்டுமஹ்மூது சொன்னார்.

"பெண்ணுக்கு இஷ்டமானால் புருஷனை சேர்த்து விட நான் தயார். சம்மதத்தை கேட்டு சேர்த்துவிடுங்களேன்" என்று ரபீக்கு உள்ளத்தை உருக்கும் தோரணையில் கூறினான்.

பருவம் வந்த பெண் பண்போடு இன்பத்தைப் பருக முடியாமல் தவிக்கிறாள் பெண் எத்தனை நாளைக்குத் தான் தன் கற்பைக் காப்பாற்ற முடியும்?

இந்த நிலையில் அந்தப் பெண் வழி தவறினால் அந்தக் குற்றம் அப்பெண்ணுக்கு மட்டுமல்ல, வழி கேட்டிற்கு காரணமாயிருந்த பந்துக்களுக்கு மட்டுமல்ல, இந்த ஊருக்கு மட்டுமல்ல, இந்த ஊருக்கு தலைமை தாங்கும் உங்களுக்கு மட்டுமல்ல, உலகிற்கே பெரிய இழுக்கு......................

அவர்களுடைய மனக் கோட்டை மண்ணோடு மண்ணாகும்படி "அந்த பாதகனோடு என்னை வாழும்படி கட்டாயபடுத்துவீர்களேயானால் என்னை அகால மரணத்தின் மையத்தாக தான் காண்பீர்கள்' என்று துக்கம் தொண்டையை அடைக்க கூறினேன். அவர்கள் முற்றிலும் ஏமாற்றம் அடைந்தனர்.

என்னுடைய தீர்க்கமான முடிவைக்கேட்டதும் ரபீக் அங்கு வந்திருந்த கிராமத்து தலைவர்கள் என்பவர்களைப் பார்த்து ஆவேசம் வந்தவன்போல் பேசலானான்

"எந்த உலமா புருஷன் வார்த்தை சொல்லாமல் பெண்ணை பிரிக்கமுடியாதென்று சொல்லி "பத்வா" கொடுத்தாரோ அந்த உலமாவை தாங்கள் எல்லோரும் முற்றிலும் நம்பி நேசிக்கிறீர்கள் அந்த உலமா இந்த "பத்வா'வில்—குறிப்பிட்ட காரணங்களுக்கு நடப்பு ஒத்திருக்குமானால் "பஸ்ஹ்" செய்து பெண்ணை மறு விவாகம் செய்து கொடுக்கலாமென்று சொல்லிருக்கிறார். மேலும் பருவம்வந்த பெண் பண்போடு இன்பத்தை பருக முடியாமல் தவிக்கிறாள். பெண் எத்தனை நாளைக்குத்தான் தன் கற்பை காப்பாற்ற முடியும்; அல்லது பிறர் தன் காப்பாற்றமுடியுமா? உயிரை இழக்கப்போவ

அவசர புத்தியை அடிமை படுத்தி அன்பு வசப்பட்டு அக்காரியம் செய்யாமல் நின்று விட்டாள் என்ற வைத்துக் கொள்வோம் அப்போது இந்த அழகிய பெண் காளையர்கள் கண்களில் பட்டுவிட்டால் கற்பை இழக்காமல் காப்பாற்றிக் காலந்தள்ளமுடியுமா? அப்படி வழி தவறிய குற்றம் அப்பெண்ணுக்கு மட்டுமல்ல, வழி கேட்டிற்கு வசவு பெறும் பந்துகளுக்கு மட்டுமல்ல; இந்த ஊருக்கு மட்டுமல்ல, இந்த ஊருக்கு தலைமை தாங்கும் உங்களுக்கு மட்டுமல்ல, இஸ்லாமிய உலகுக்கே பெரிய இழுக்கு, அழிக்கமுடியாத கறை' இப்படிக் கூறிவிட்டு இதைப் படித்துப் பாருங்கள் என்று கடிதத்தை அவர்களிடம் நீட்டினான் ரபீக் என்ன ஆச்சரியம்? என் அருமை பாட்டி.

ரஹீமாவுக்கு!

என் வாழ்வு சீர்படுமென்று எதிர்பார்த்த நானும், நீயும் ஏமாற்றம் அடைந்தோம். நான் வாழ்வதை கண்டால் சந்தோஷமடைவாயல்லவா? இந்த பாழும் இஸ்லாமிய சட்டத்துக்கு விடைகொடுத்துவிட்டு இவ்வுலகை விட்டு பிரிவதே என் வாழ்வாக இருந்தால் இதையும் நீ சகிப்போடு ஏற்றுக் கொள்ளவேண்டியதுதான்

துன்பத்தில் மூழ்கிட
பரீதா

"இந்த இரு வாரங்களுக்குமுன் இவ்வழியில் செல்லும்போது—சிறு பையனொருவனின் கையிலிருந்து கீழே விழுவதை கண்டேன் அதை எடுத்துப் படித்து பார்த்தேன். அவ்வளவுதான் என் கடமையை செய்ய முன்வந்தேன். இஸ்லாமிய சட்டத்தை இப்பெண் நிந்திக்க தொடங்கியது நம் ஊழலின் காரணம்தான். இஸ்லாமிய சட்டம் பரிசுத்தமென்பதை நிரூபிக்கவே இந்தஏற்பாடு செய்தேன்" என்று ரபீக்கு ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஊன்றிப் பதியும்படி உணர்ச்சி பொங்கச் சொன்னான்.

என்னை 'பஸ்ஹ்' செய்து அந்த பாதகனின் பந்தலிருந்து பிரித்துவிட்டார்கள் அப்போது என் பாட்டி ரபீக்கை "நீ ஏற்றிய விளக்காய் இந்த பொண்ணு நல்லா இருக்கணும். நீயும் நூறு வயசுக்கு இருப்பாய்' என்று வாழ்த்தினார்கள். என் உள்ளம் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தது. ரபீக்கின் ஞாபகார்த்தமாக இருக்கவே ரபீக்கின் மனைவியிடமிருந்து இந்த போட்டோவை பெற்றேன்.

பிறகு என் வாழ்க்கையின் இன்பகரமாக தங்களை மறுமணம் செய்தேன் தங்களின் பாக்கியமே இந்த செல்வன் முகம்மது ரபீக்கென்று எதற்காக பெயர் வைக்கச் சொன்னேன் தெரியுமா? ரபீக்கின் முழு பெயரும் அதுதான் என்று பரீதா கூறி முடித்தாள்.

உஸேன் பிரமித்துபோய் பரீதாவின் களங்கமற்ற முகத்தை அன்போடு நோக்கினான்.

(கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனை—யாரையும் குறிப்பன வல்ல.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிமகுடமிழந்த ஜோர்டான்மாஜி மன்னர்

## பாகிஸ்தான் தூதுவருக்களித்த பரிசுகள்

## குண்டூசி, ஈட்டி, குர்-ஆனும்— பிரிட்டிஷ் சேவையின் பலனும்

மத்தியக்கிழக்கில் மூஸ்லிம் மன்னர்களுக்குப் போதாத காலம். எகிப்து மன்னர் பரூக் நாடு கடத்தப்பட்டு ஒரு சில தினங்களுக்குள் ஜோர்டான் மன்னர் தலால் பீட்டுக் கிழிக்கப்பட்டார். பாரஸீக மன்னர் ஷாவும் அதிகாரமற்ற பொம்மையாகிவிட்டார்.

மன்னர் தலாலின் மணிமகுடத்தை மண்ணில் உருட்ட முன்பு, பிரதம மந்திரி அபுல் ஹூடா ஜோர்டான் பாராளுமன்ற விசேஷக் கூட்டமொன்றில் கூறியதாவது:

கொலை செய்யப்பட்ட தனது தந்தைக்குப் பதிலாக அரியாசனமேறுவதற்காக மன்னர் தலால் 10 மாதங்களுக்கு முன்பு ஸ்விட்ஜர்லாந்து ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினார் இருளடைந்த அவரது உள்ளம் மோசமான நிலைமையை அடைந்துவிட்டது தினசரி காலையில் சௌக்கியமாயிருக்கிறார். ஆனால் கோரமாக ஆகவாடிச் சோர்ந்து சந்தேகாஸ்பதமான முறையில் நோய்வாய்ப்பட்டு விடுகிறார். அவர் ஏதோ சதிகள் நடப்பதாக கற்பனை செய்கிறார். தனக்கெதிராகச் சதி செய்கிறார்களென்று நம்பிக்கையான அதிகாரிகளையும் அவர் துப்பாக்கியால் சுடுகிறார். அவருடைய வேலைக்காரர்களையும், அவர் காதலிக்கும் அவரது மனைவி ராணி ஜெயினையும் அடித்துத் துன்புறுத்துகிறார். ராணியின் சகோதரரை அரண்மனையைவிட்டே, விரட்டிவிட்டார் சில சமயங்களில் இரகசியமாக மாளிகையிலிருந்து வெளியேறி சருமரோகமுள்ள குதிரைமீது எவ்விதப்பாதுகாப்புமின்றி அம்மானில் (தலைநகரில்) சவாரி செய்கிறார்.

### மரு, மங்கை

'கடைசியாக மன்னர் ஸ்விட்ஜர்லாந்து சென்று சிகிட்சை செய்து கொள்ள இசைந்தார். ஆனால் அவர் ஸ்விட்ஜர்லாந்துக்குப் போவதற்குப் பதிலாக பாரிஸுக்குச் சென்றுவிட்டார். பாரிஸ் காட்சிகளைக் கண்டதும் சிகிச்சை செய்து கொள்ள மறுத்துவிட்டார். ராஜாங்க வைத்திய அரதடியால அடிப்பதாக அவர் மிரட்டினார். இளவரசர் ஹூஸேனை (இன்றைய மன்னர்) அறையைவிட்டு வெளியே துரத்திவிட்டார் ராணி ஜெயினை மனையப் புடைத்தார் ராணி ஸ்விட்ஜர்லாந்துக்கு கம்பி நீட்டிவிட்டார் பாரிஸிலிருக்கும் ஜோர்டான் ஸ்தானீகரான மனைவியையும் தாக்கினார். நன்கு குடித்துக் கூத்தாடினார் விபசாரிகளுக்குப் பணத்தை வாரியிறைத்தார்"

பிரதம மந்திரி இச்செய்திகளை பாராளுமன்றத்தில் கூறியதும் பிரதிநிதிகள் நிச்சப்தமாக அழத் தொடங்கிவிட்டனர்.

1920ல் ஸ்தாபிக்கப்பட்ட இந்த சிறிய இஸ்லாமிய ராஜயத்தில் பிரிட்டிஷாரின் மேலாதிக்கம் நிலவுவதால், தலால் ஒரு பொம்மை மன்னனாகவேயிருந்தார். தலாலின் சகோதரன் இளவரசன் நெயிப் சிம்மாசனத்தைக் கைப்பற்ற நாடு கடத்தப்பட்ட சில ஜோர்டான் காரர்களுடன் சதி செய்துகொண்டிருக்கிறார்.



லிபியாவின் சரித்திரத்திலேயே முதன்முதலாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்நாட்டு மக்கள் சமீபத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களித்தார்கள். ஆண்கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்கள் பெண்களுக்கும் இத்தாலிய நாட்டிலிருந்து வந்து குடியேறினவர்களுக்கும் வாக்குரிமை கிடையாது. திரிபோலியில் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குப் போகுமுன்பு அபேட்சகர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பல்வேறு வர்ணங்களை சுவரொட்டி விளம்பரங்களில் கூர்ந்து கவனிக்கின்றார்கள்.




### அதிசயப் பரிசுகள்

மன்னர் தலால் ஜோர்டானிலிருந்து பாரிஸுக்குப் புறப்பட சிறிது நேரத்திற்கு முந்தி பாகிஸ்தான் ஸ்தானீகரை அழைத்து அவரிடம் மூன்று பரிசுகளைக் கொடுத்தார். முதலாவது பரிசு தலாலின் பாட்டனாராகிய மெக்காவிலிருந்த ஹூஸேனுக்குச் சொந்தமான வைரம் பதித்த ஒரு குண்டூசியாகும். அதைக் கொடுக்கும்போது "எனது பாட்டனார் பிரிட்டிஷாருக்குச் சேவை செய்தார். ஆனால் அனாதையாக இறந்தார்" என்று தலால் கூறினார் அவருடைய தந்தை அப்துல்லாவுக்குச் சொந்தமான தங்க எழுத்துகளில் அச்சிடப்பட்ட ஒரு திருகுர்ஆன் நூலை இரண்டாவது பரிசாகக் கொடுக்கும்போது அவர் கூறியதாவது "எனது தந்தை பிரிட்டிஷாருக்குச் செய்த சேவை அனந்தம். ஆனால் அவர் ஒரு பள்ளிவாசலில் கொலை செய்யப்பட்டார்." "நானும் பிரிட்டிஷருக்குச் சேவை செய்கிறேன், எனது முடிவு என்னவாகுமோ?" என்று கூறிக்கொண்டே மூன்றாவது பரிசாகத் தனக்குச் சொந்தமான வேலைப்பாடுகள் அமைந்த ஒரு ஈட்டியைப் பாகிஸ்தான் தூதுவரிடம் கொடுத்தார்

கடைசியாக சித்தசுவாதீனமற்றிருப்பதால் மன்னர் தலால் பாரிஸில் இருக்கும்போதே அரியாசனத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு மாஜி மன்னர்கள் கோஷ்டியுடன் சேர்ந்துவிட்டார் அவரது குமாரன் ஹூஸேன் மன்னராக்கப்பட்டிருக்கிறார். 17 வயதுள்ள மன்னர் ஹூஸேன் இப்பொழுது தனது மைத்துனராகிய இராக் மன்னர் பெயிஸாலுடன் "ஹாரோ' கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார் அவர் "மெஜாரிடி" சிம்மாசனம் ஏறும்வரை 3பேர்கொண்ட ஒரு 'ரீஜன்ஸி' சபை ஜோர்டானை ஆட்சி செலுத்தும். அவர் சமீபத்தில் ஜோர்டானுக்குத் திரும்புவாரென்று தெரிகிறது.

### ராணியைத் தேடுகிறார்

'ரீஜன்ஸி' சபை ஸ்தாபிக்கப்பட்டது என்ற செய்தி எட்டியதும் தலால் மன்னர் "இதோ அம்மனுக்குப் புறப்பட்டுவிட்டேன். ஜோர்டான் ராஜ்யம் வாழ்க!" என்று ஒரு தந்தியை பிரதம மந்திரிக்கு பாரிஸிலிருந்து அனுப்பிவைத்தார். ஆனால் அம்மனுக்குப் போவதற்குப் பதிலாக அவர் மனைவியைத் தேடி ஸ்விட்ஸர்லாந்துக்குப் போய்விட்டார். அங்கே அவள் அவர் கையில் சிக்கவில்லை. அவளிருந்த ஹோட்டலை வலைபோட்டுத் தேடிவிட்டார். அவள் தனது புதல்வன் மன்னர் ஹூஸேனையும் அழைத்துக் கொண்டு போலீஸ் பாதுகாப்புடன் மறைந்து போய்விட்டாள்.

"என்ன செய்யவேண்டும் என்பதே எனக்குப் புரியவில்லை" என்று பத்திரிகை நிருபரிடம் கூறினார் அபாக்கியசாலி மாஜி மன்னர் தலால்.

# நாத்திகம் எது?

பற்றுக்கோடு கொண்டு வளரும் கொடிபோன்றது ஆத்திகம் தானே வளரும் செடிபோன்றது நாத்திகம். ஆனால், அறிவும் துணிவுமின்றி நாத்திகராக முடியாது. ஆகவேதான் உலகில் என்றும் நாத்திகம் சிறுபான்மையாகவே இருந்திருக்கிறது; ஆனால் என்றும் இல்லாமல இருந்ததுமில்லை

பிள்ளைப் பருவத்திலேயே திணிக்கப்பட்டு வெறும் நம்பிக்கையால் "கடவுள் உண்டு" என்பதைவிட, படித்து, நினைந்து, புரிந்து அறிவால் கடவுள் நினைவை வளர்ப்பதே உண்மையான வளர்ச்சி; ஆத்திகம். விவேகானந்தர் வாழ்வு அப்படியே நடந்தது.

கடவுள் உருவத்தை வழிபடுவார் ஆத்திகர்; வழிபடாதார் நாத்திகர் இவையே ஆத்திக நாத்திகருக்குரிய இலக்கணமாகக் கொள்ளப்படுகிறது. உருவ வழிபாடு செய்பவன், கடவுள் தன்மையில் வாழவில்லையானால், அப்போது அவன் ஆத்திகனா? 'இல்லை' என்பதே விவேகானந்தரின் கொள்கை.

ஆகவே, உருவ வழிபாடு செய்வதும் செய்யாததும் அவரவர் விருப்பம்; சூழ்நிலை; காலப்போக்கினைப் பொறுத்தது. ஆனால் ஆராய்ச்சியின் முடிவென்ன?

கடவுள் தன்மையை வணங்குபவன்—அவ்வழி வாழ்ந்து காட்டுபவன் ஆத்திகன்

கடவுள் தன்மையை வணங்காதவன்—அதன் வழி வாழாதவன் நாத்திகன

இதுவே சமயப் பெரியார்களின் முடிந்த கொள்கையுமாகும். அப்பரும்,

'பொக்க மிககவர்
பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன்
அவர் தமை நாணியே'

என்கையில், உருவ வழிபாடென்னும் பார்வையில் நடத்தும் நாத்திக வாழ்வினை-கடவுள் தன்மைக்கு மாறான அன்பற்ற நெறியினை-கடிந்திருக்கிறார்.

மு. கோவிந்தசாமி

இனி, கடவுள் தன்மை என்பது யாது? உயர் மனிதத்தன்மையே அது; மனிதன் சிறக்கும் நுண்ணறிவின் நுனியே அது வள்ளுவர் மொழியில், உலகத்தோடு, நாட்டின் நல்வாழ்வினோடு, இசைந்து நடத்தும் மாசற்ற வாழ்வேயாகும். சுருங்கக் கூறின், அறிஞரால் அவ்வக்காலங்களில் எவை மனிதருக்கு வேண்டிய கடாத சிறந்த இயல்புகள் என ஒப்புக்கொள்ளப்படுமோ அவற்றையே பற்றி நடத்தலாம் அவ்வியல்புகள் காலந்தோறும் மாறியே வந்துள்ளன; உடன் அவ்வக்காலக் கடவுள் தன்மையும் மாறி நினைக்கப்பட்டுவந்துள்ளன.

இத்தன்மைய வாழ்வுதான் அற வாழ்வு; கடவுட் கு அடுத்து, (2ம், அதிகாரத்தில்) வள்ளுவர் மொழியும் வாழ்வு. ஆண்டவன் 'அறவாழி அந்தணன்' என்கிறார் அவரே 'நன்றுடையானைத் தீயதில்லானை' என நவின்றார் நாவுக்கரசரும். இந்த நன்மையைப் பற்றி மேனாட்டுத் தத்துவப் பேரறிஞரெல்லாம் எண்ணற்ற நூல்களில் எவ்வளவோ மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கின்றனர்.

அப்படியானால், இன்று கடவுள் தன்மையென நம் நாட்டின் பெரும்பான்மை அறிஞரால் ஓதப்படுவன யாவை?

"சாதி சமய, நிற வேற்றுமை யழிக! தனியுடைமை வீழ்ந்து பொதுவுடைமை ஓங்குக! நாட்டால், மொழியால், சமுகத்தால் வரும் அடிமை தொலைக! மூட நம்பிக்கை அறுக!" இவை தாமே அவர்களின் எண்ணம்? தீமையை அழிக்க முயல்பவன் ஆத்திகன்; தீமையை வளர்க்க நினைப்பவன் நாத்திகன் இந்த முடிவினை, யாரேனும் மறுக்க முடியுமா?

இன்று சாதி, சமய வேற்றுமையை வளர்க்கும் இனமொன்று இருக்குமாயின், அதுவன்றோ நாத்திகம்! பொதுவுடைமையை எதிர்க்கும் இனமுண்டேல், அதுவன்றோ நாத்திகம்! மூடநம்பிக்கையை மறைவாகப் பரப்பிவரும் இனமொன்றுண்டேல், அதுவே நாத்திகம்! இவற்றையொழிக்க வருவார் யாவரேனும் ஆகுக, உருவ வழிபாடு அவரிடமுண்டோ இல்லையோ, அவர் அனைவரும் ஆத்திகர்; ஆத்திகரே.

'நாத்திகம், எனக் கருதும் ஒன்று தனியானதன்று; ஆத்திகத்தினின்றும் வேறானதுமன்று.

(11 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### நோயாளர் படும்பாடு

ஏருவூர் றூறல் ஆஸ்பத்திரியில் போதிய ஒழுங்கு வசதியின்மையால் நோயாளர் பெருந்தொல்லைக்குட்பட்டு வருந்துகின்றனர். ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெறவேண்டியவர்களுக்கு தேவையான படுக்கைகள் கிடையாது. போதியதாய் இடவசதி இல்லை. இந்த நிர்வாக லட்சணத்தால் நோயாளர்கள் நிலத்தில் கிடந்து உழலவேண்டியதாய் இருக்கின்றது. கர்ப்பிணிகள் நிலை மிகமிக மோசம். தொல்லையைக் கூட்டி நோயை அதிகரிக்கச் செய்யக் கூடிய நிலையில்தான் றூறல் ஆஸ்பத்திரி சேவையாற்றிவருகின்றது.

இங்ஙனம்
"வள்ளுவன்"
ஏரூர்

### சுருதியுடன் இழைய தயங்கியதேன்?

சங்கீதத்தின் மாதா சுருதி என்பது நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். சில தினங்களுக்கு முன்னர் ஒலிபரப்பப்பட்ட ஒரு நிகழ்ச்சி தாயைத் தேடியழும் குழந்தையைப்போலிருந்தது. நிகழ்ச்சி நிரலைப் புரட்டியபோது அதில் பங்குபற்றியவர் பேராசிரியர் ஸ்ரீநிவாசனெனக் கண்டிருந்தது. நான் திகைத்துவிட்டேன். சங்கீதப் பரீக்ஷைக்குத் தரம் பிரிக்க வந்திருக்கும் பேராசிரியர் சுருதியுடன் இழையத் தயங்குவதேன்? ரேடியோ சிலோனில் குற்றங் காண்பதென் நோக்கமல்ல. அன்றைய நிகழ்ச்சியைக் கேட்ட நண்பர்கள்—ஏன் பேராசிரியர்கூட நான் கூறிய முடிவிற்கே வந்திருப்பார்கள். நிகழ்ச்சி றெக்கோட் செய்யப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். வேண்டுமானால் அதை ஸ்ரீநிவாசனே திருப்பவும் ஒருமுறை போட்டுப் பார்த்தால் உண்மை தெரிந்துவிடும்.

இங்ஙனம்
அ: கண்ணன்
கொழும்பு.

### பள்ளி வேண்டுகோள்

ராகமை க்ஷயரோக ஆஸ்பத்திரியில் உள்ள பள்ளிவாசலைச் சுற்றி ஒரு சுவர் எழுப்ப வேண்டியது முக்கிய தேவையாக இருக்கிறது. காரணம் அடுத்த காணிகளில் வசிக்கும் ஹின்ஸீர் மிருகம் உலாவச் செல்லும்போது சில சமயங்களில் பள்ளிவாசல் உள்ளே வருகின்றன. முஸ்லிம் புண்ணியவான்களுக்கு அறியத்தருவது என்னவென்றால் நாங்கள் எடுத்துக்கொண்ட இந்த முயற்சிக்கு ஆதரவளித்து பொருளுதவி செய்யுமாறு தயவாக கேட்டுக்கொள்கிறோம்.

பணம் அனுப்பும்போது கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைப்பீர்களாக.

கௌரவ காரியதரிசி
முஸ்லிம் நோயாளர்
சங்கம் க்ஷயரோக
ஆஸ்பத்திரி, ராகமை


# சுதந்திரன்
SUTANTIRAN

194எ, தட்டாதெரு        போன்: 3411

1952 ஆகஸ்ட் மீ 24உ


## உணவு நெருக்கடி

1952—53ம் வருட வரவு—செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது நாம் எழுதிய விமர்சனத்தில் பங்கீடு அரிசி விலை உயர்த்தப்படும், இல்லையேல் பங்கீடு அரிசி அளவு குறைக்கப்படுமென்று என்று எழுதியிருந்தோம்.

அரிசி விலையைக் கூட்டுவதற்காக இப்பொழுது அரசாங்கம் ஆலோசித்து கொண்டிருக்கிறது. ஆனால் அதனால் வாழ்க்கைச் செலவு கூடுமென்றும், அரசாங்கச் சிப்பந்திகளுக்கு அதிகப்படியான பஞ்சப்படி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்றும் அஞ்சும் சில மந்திரிகள் விலையைக் கூட்டும் விபரீதத் திட்டத்தை எதிர்க்கின்றார்களாம். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக சேர் ஒலிவர் உட்பட மந்திரிகள் அனைவரும் பகீரத பிரயத்தனம் செய்தும் வாழ்க்கைச் செலவு உயர்வின் ஒரு புள்ளியைக்கூட அசைக்க முடியவில்லை. வாழ்க்கைச்செலவு ஏறுமுகத்தில்தான் இருக்கிறது.

அரசாங்கச் சிப்பந்திகளுக்கு மட்டும் பஞ்சப்படியை உயர்த்தி விடுவதால் நாட்டு மக்கள் எல்லோரும் பயனடையப் போவதில்லை. "அரிசி விலையைக் கூட்டினாலும், சிப்பந்திகளுக்கு அதற்கொப்ப பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறோம்" என்று கூறுவது பிரசாரத்திற்கு வேண்டுமானால் பயன்படலாம். ஆனால் பொதுமக்களின் நிலைமை சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்ததைப்போலத்தான் ஆகிவிடும்.

தேசத்தின் தந்தையும் தனயனும் 20 ஆண்டுகளாக விவசாயத்தைப் பெருக்கியும் இப்பொழுது கடுமையான அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. கல்லோயா திட்டங்கள் போன்ற திட்டங்களுக்கு செல்லாப வரிப்பணத்தைக் கோடிக் கணக்கில் கொட்டியும் இன்னும் அயல் நாடுகளுக்கு அன்னக் காவடி தூக்க வேண்டிய நிர்ப்பந்தம்தான் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமை திடீரென தோன்றியதன்று. இத்தகைய உணவு நெருக்கடி ஏற்படுமென்பதை ஏற்கனவே யு.என்.பி. அரசாங்கம் உணர்ந்திருந்ததென்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேர்தலுக்கு முன்பு உணவு நிலைமையை வெளியிட்டிருந்தால், மக்கள் யு.என்.பிக்கு வாக்குக் கொடுப்பதற்குப் பதிலாக சீட்டுக் கொடுப்பார்களென்று அஞ்சிய ஆட்சியாளர்கள் உண்மை நிலையை மக்களிடமிருந்து மறைத்து வைத்தார்கள்.

நெருக்கடி குரல்வளையைப் பிடித்து நெரித்ததும் சேர் ஒலிவர் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் அரிசி தேடிச் சென்று வெறுங்கையுடன் திரும்பினார். அதன் பிறகுதான் அரிசிக் களஞ்சியங்களான சீனா, பர்மா, முதலிய கீழ்த்திசை நாடுகளுக்கு தூதனுப்ப அரசாங்கம் முடிவு செய்தது.

பங்கீடு முறை அமுலுக்கு வரும் முன்பு கிராமாந்தர மக்களில் ஏறக்குறையப் பாதிப் பேருக்கு அரிசி அல்லாத உப உணவுப்பொருட்கள்தான் முக்கியமான ஆகாரமாயிருந்தன. பங்கீடு அமுலுக்கு வந்ததும் அரிசி உணவைச் சாப்பிடாதவர்களுக்கும் பங்கீடுப் புத்தகங்கள் வினியோகிக்கப்பட்டதால், அவர்களும் அரிசி வாங்கத் தொடங்கிவிட்டார்கள். அதனால் அரிசியின் தேவை அதிகரித்த நெருக்கடி வளர்ந்தது. ஆரம்பத்தில் அரிசி உணவு சாப்பிடுபவர்களுக்கு மட்டும் பங்கீட்டுப்புத்தகங்களை வினியோகம் செய்திருந்தால் இந்நெருக்கடி ஓரளவு குறைந்திருக்கலாம்.

இலங்கை மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு என்றதும் இந்தியா உதவி செய்ய முன்வந்திருக்கிறது. தன் சொந்த நாட்டு மக்கள் போதிய உணவின்றி வாடும்போதுகூட 15000 டன் அரிசி இலங்கைக்கு கடன் கொடுத்து உதவ இந்தியா சம்மதித்திருப்பது அதன் விசால மனப்பான்மையைதான் எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை-இந்தியர்களுக்கு இழைக்கப்படும் கொடிய இன்னல்களுக்காக உணவைக்கொண்டு வஞ்சம்தீர்க்கும் கீழ்த்தரமான மனோபாவம் இந்தியாவுக்கு என்றும் கிடையாது. அண்டை நாட்டார் பசித்திருக்க தான் உண்பது மனிதவர்க்கத்திற்கே செய்யும் துரோகம் என்பதுதான் இந்தியாவின் முடிவு. அதுதான் பாரதநாட்டின் தலைசிறந்த பண்பாடு.

இந்த நெருக்கடியான கட்டத்தில் இந்தியா புரிய முன்வந்திருக்கும் இப்பெருதவிக்கு இலங்கையர் ஒவ்வொருவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

## நல்லையா அடிச்சுவட்டில் மற்றொரு இளம் பிரதிநிதி!

முதன் முறையாகப் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் இளம் பிரதிநிதிகள் சிலரை ஒரு விதக் "கிறுக்கு" பீடிப்பதுண்டு. சாதாரண மனிதனைவிட தாம் எளிமையானவர் என்று காட்டிக்கொள்ள அவர்கள் முற்படுவார்கள். அவ்விதம் செய்தால் பொது ஜனப் பிரீதிக்குள்ளாகி மக்கள் தலைவனாக நிலைத்துவிடலாம் என்பது அவர்கள் கருத்து.

மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வது; பஸ்ஸில் ஏறி கடைசி சீற்றின் ஒரு மூலையில் ஏனோ தானோ என்று உட்கார்ந்துகொள்வது; பனியன் போடாமல் ஒரு ஆவாரத்தைப்போட்டு பொத்தான்கூடப் பூட்டாமல் நெஞ்சைத் திறந்துவிட்டுக்கொண்டு திரிவது; கொன்றைக் கடலையை வாங்கி ஒன்றொன்றாக வாயில் போட்டுக் கொண்டு காலில் செருப்புக்கூட இல்லாமல் பேவ்மெண்டில் சுற்றித் திரிவது; இரண்டொரு சதம் பெறுமதியான பீக்கொக் அல்லது திறீரோஸ் சிகரட்டைப் புகைப்பதோடல்லாமல் பார்ப்போருக்குத் தெரிவதற்காக காலியான ஜேத்தர சிகரட் டின் ஒன்றைக் கையிலேயே சதா வைத்திருப்பது; இன்னோரன்ன பனித்தனங்கள் சில இளம் எம்.பிக்களை ஆட்கொள்வதுண்டு.

காலிப் பிரதிநிதி திரு தஹநாயகா போன்ற சில தலைவர்கள் பொதுமக்களிடையே செல்வாக்குப் பெற்றதற்கு இத்தகைய நடவடிக்கைகள் தான் காரணம் என்பதாக எண்ணிக்கொண்டு இந்த புதிய 'கொப்பிப் பூனைகள்" இப்படி நடக்க முயற்படுகிறார்கள். ஆனால் தங்க நகைக்கும் கில்ட் நகைக்கும் வித்தியாசம் தெரியாத பொது மக்கள் இந்தக் காலத்தில் வெகு சொற்பம் என்பதை அவர்கள் அறியவேண்டும்.

ஃ

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இளம் பிரதிநிதி அடிக்கடி கொழும்புக் கோட்டை ஸ்டேஷனுக்கு முன்பு கால் நடையாகக் காணப்படுகிறாராம். அலுவல் இல்லாமல் அங்கு சுற்றித்திரியும் அவர், யாராவது அறிந்த வாலிபர்கள் அந்தப் பக்கம் வந்தால் "ஹலோ, எப்படி? என்ன டாப்பா பாடுகள்? ஊருக்குப் போகவில்லையா? கையில் ஒரு சதம்கூட இல்லை. சிகரட் இருந்தால் ஒன்று கொடுமேன். தேத்தண்ணி குடிக்கக்கூடக் காசில்லை" என்கிறாராம்.

சில ஏமாந்த சோணகிரிகள். "அப்படியா, வாங்கோ, வாங்கோ' என்று ஆனந்த பவனுக்குள் அவரை அழைத்துப்போகிறார்களாம். வெளியில் வந்ததும் மேற்படி வாலிபர்களுக்கு காலு ரூபாய் காலி. ஆயினும் 'வட் எ சிம்பிள் மேன்" என்று அவர்கள் சொல்லிக்கொண்டுபோகிறார்களாம்.

அவர்கள் சற்றுத் தூரம் போனதும் பிரதிநிதி தனது மணிப்பர்ஸை இழுத்து கற்றையாகவிருக்கும் பத்து ரூபாய் நோட்டுக்களில் ஒன்றை மாற்றிச் சில்லறைகளைப் பாக்கட்டில் போட்டுக் கொண்டு கோட்டை ஸ்டேஷனுக்குள் நுழைகிறாராம்.

ஃ

இதே பிரதிநிதி கடந்த வாரம் நடைபெற்ற யு.என்.பி. பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் கொஞ்சம் காரசாரமாகப் பேசினாராம். கல்லோயாப் பகுதிக்கு தாம் நேரில் சென்று பார்த்ததில் சிங்களக் குடிகளே குடியேற்றப்படுவதாகவும், உள்ளூர் தமிழ் முஸ்லிம் மக்களைப் பார்க்கிலும் வெளியூர் சிங்களவர்களுக்கே அங்கு அதிக சலுகைகள் காட்டப்படுவதாகவும், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் சொல்வதில் முற்றும் உண்மையிருக்கிறது என்றும் அவர் நெருப்பெடுத்தாராம்.

பேச்சு முடிவில் திரு டட்லி அவரை தனியாக அழைத்துச்சென்று "இப்படி விஷயங்களையெல்லாம் இப்படிப் பகிரங்கமாகப் பேசக்கூடாது. என்னிடம் தனிமையில் சொன்னால் நான் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன். இன்று பேசிய மாதிரி நீர் பேசுவதானால் எதிர்காலத்தில் உமக்கு வரவிருக்கும் பாராளுமன்றக் காரியதரிசிப் பதவிக்கு குந்தகம் விளையலாம்" என்று நயமாகப் பயமுறுத்தினாராம். அத்தோடு அந்த இளஞ்சிங்கம் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிட்டதாம். பாராளுமன்றக் காரியதரிசிப் பதவியென்றதும் அந்தப் பிரதிநிதிக்கு நாக்கில் ஜலம் ஊறியிருக்கலாம்.

ஃ

தம்மைத் தேர்ந்தனுப்பிய மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யாமல் பதவிக்காக வாயைப் பிளந்தால் முடிவில் சுந்தரலிங்கத்திற்கு, சிற்றம்பலத்திற்கு, நல்லையாவுக்கு ஏற்பட்ட கதியே இவருக்கும் ஏற்படும் என்பதை இந்த இளம் பிரதிநிதி ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். திரு நல்லையாவின் அடிச்சுவட்டைப் பின்பற்ற முனையும் இந்தப் பிரதிநிதிக்கு கிழக்கு மாகாண மக்களின் சார்பாக இதைத் தெரிவிக்கவிரும்புகிறோம்.

ஃ

திரு நல்லையா சுகமடைந்ததும், மேஜர் துக்கவெலயை இங்கிலாந்திற்கு ஸ்தானிகராக அனுப்பிவிட்டு சுகாதார மந்திரிப் பதவியை அவருக்கு யு.என்.பி. அரசாங்கம் காணிக்கையாகச் சமர்ப்பிக்கும் என்று திரு நல்லையாவின் ஆதரவாளர்கள் சிலர் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இது சாத்தியமா அசாத்தியமா என்பதை அடுத்த வாரம் ஆராய்வோம்.

"பாடும் மீன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்காரர்களுக்குத்தானு

## பல்கலைக்கழகம்?

—●—

### வெளியிலிருந்து பட்டம் பெற வசதிகள் வேண்டும்

இலங்கை பல்கலைக் கழகத்தில் வெளியிலிருந்து பட்டம் பெறக்கூடிய பரீட்சைகளை நடத்தவேண்டும் என்று கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் ஒரு மகஜரில் இப்பொழுது பாராளுமன்றப் பிரதிநிதிகளிடம் கையெழுத்து வாங்கப்படுகிறது.

பிரதிநிதிகளின் கையெழுத்து வாங்கிய பின்னர், சர்வகலாசாலைக் கல்வியினால் பயன்பெறக் கூடிய மாணவர்களின் பெற்றோர்களின் கையெழுத்துகளைச் சேகரிப்பதற்காக அது நாடு முழுவதும் வினியோகிக்கப்படும்.

பல்கலைக் கழகத்தை பேராதெனிக்குக் கொண்டு போனபின்னர், கொழும்புக் கட்டடத்தில் மற்றொரு பல்கலைக் கழகம் நிறுவவேண்டுமென்று பிரஸ்தாப மகஜர் கோருகிறது.

"பணக்கார மாணவர்கள் மட்டும் கல்வி பயிலக்கூடிய முறையில் பேராதெனி சர்வகலாசாலை மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். அது இலவசக் கல்வித் திட்டத்தை கேலிக்கூத்தாக்கிவிடுகிறது. இது பணக்கார மாணவர்களுக்குமட்டும் பல்கலைக் கழகத்தில் இடமளிப்பதாகும் இது அநியாயம் மட்டுமின்றி ஜனநாயகத்திற்கு விரோதமான செயலும் கூட.

இலங்கை அளவு ஜனத்தொகைகொண்ட ஆஸ்திரேலியாவில் 8 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆனால் இலங்கையில் ஒன்றுதான் இருக்கிறது" என்று மகஜர் கூறுகிறது.


## 'புரட்சி வீரர்'
### லக்ஷிமிகாந்தன்
வாழ்க்கை வரலாறு

காந்தனின் வாழ்க்கையில் நடந்த போராட்டங்கள், உயிர் வாழ அவர் செய்த தந்திரங்கள் இன்னும் பல இரகசியங்களைக் கொண்டது.

ரூ. 1-10 ஸ்டாம்பாக அனுப்பி தனிப் புத்தகம் பெறலாம்.

**மோகன் & கோ. லிமிடெட்,**
66½ 1ம் குறுக்குத் தெரு
கொழும்பு



### அறிவித்தல்

பொககாவல நியூசாரதாவில் இன்றுமுதல் பேப்பர் பெறமுடியாது இனிமேல் கீழ்க்கண்ட எமது புது விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

K பெரியசாமிபிள்ளை
நியூஸ் பேப்பர் ஏஜெண்ட்
மோராங்கந்தை,
அரங்காவ P. O


### ரஞ்சிதம்........

[4-ம் பக்கத் தொடர்ச்சி] றப் பெண்கள் வயிற்றுச் சோற்றுக்காகவாழ்நாளெல்லாம் மலைகளில் வேலை செய்து மாய்கிறார்கள். பெற்றபிதாவும் கட்டிய கணவனும் உயிரோடிருக்கையிலேயே நமது சகோதரிகள் ஆடவர்களுடன் சரிநிகர் சமானமாக தோட்டங்களில் வேலை செய்ய வேண்டியிருக்கின்றதே. ஒரு ஆடவன் உழைப்பது அவனுடைய குடும்ப சம்ரக்ஷணைக்குப் போதாமலிருப்பதாலன்றோ பெண்களும் சம்பாதிக்கவேண்டியிருக்கின்றது. மலைகளில் வேலை செய்யும் அத்தனை பெண்களும் மீனாட்சியின் ஸ்திதியிலிருந்து மனமொத்த ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு பதிக்கும் பிள்ளைகளுக்கும் சிசுருஷை செய்து கொண்டும் வீடு வாசலைப் பார்த்துக்கொண்டும் இன்பமாக இல்லறம் நடத்த முடிந்தால்......... என்றெல்லாம் சுந்தரத்தின் சிந்தனை சிறகு கட்டிப் பறந்தது.

"தம்பி சுந்தரம்! இதை உங்களுடைய வீடாகவே வேளையும் சங்கோசமில்லாமல் வந்து சாப்பிட்டுப்போகலாம். மீனாட்சி! அம்மாகிட்ட சொல்லி சுந்தரத்துக்கு ஒரு குறையுமில்லாமல் பார்த்துக்கணும்" என்று கருப்பண்ணன் கூறிய வார்த்தை சுந்தரத்தின் சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

"மூன்று வேளையும் இங்கே வந்துபோக சௌகரியப்படாதுங்க. சாப்பாட்டை பங்களாவுக்கே அனுப்பிவைக்க முடியாதுங்களா?" என்றான் சுந்தரம் மிகவும் வினயமாக.

"அனுப்பிவைக்க முடியாமல் என்ன? இங்கே வந்து சாப்பிட்டா போதும் போதாததைக் கேட்டுவாங்கிச் சாப்பிட சௌகரியமாயிருக்குமேன்னுதான் பார்க்கிறேன்" என்றார் கருப்பண்ணன்.

அதெல்லாம் வேணுமுங்க நீங்க இவ்வளவு அன்புடன் எவ்வளவை அனுப்பினாலும் அது எனக்கு தாராளமாகப் போதுமுங்க மூன்று வேளையும் வாரதென்றால் எனக்கும் சிரமமாகத்தான் இருக்கும். யார் மூலமாகவாவது சாப்பாட்டை அனுப்பி வைத்தால் அவனுக்கு மாசா மாசம் ஏதும் குடுத்துடறேனுங்க" என்றான் சுந்தரம் புறப்பட்டுக் கொண்டே.

"ஆள்தான் வேணுமானால் நூறு ஆள் பிடிக்கலாம். நீங்க ஒண்ணும் கொடுக்கவேணும் தம்பி அதெல்லாம் நானே பார்த்துக்கிறேன்" என்று கூறி வழியனுப்பினார் கருப்பண்ணன்.

"வாரேன் மாமா! மீனாட்சி போயிட்டு வரட்டுமா?" என்று கடமைக்காக கூறுகிறவன்போல் கூறி விட்டு வெளியேறினான்.

கருப்பண்ணனும் மீனாட்சியும் "நல்லதுங்க" என்று ஏககாலத்தில் பிரியாவிடை கூறினார்கள்.

கருப்பண்ணன் வீட்டிலிருந்து திரும்பிய சுந்தரம் முதல் காரியமாக தாய்க்கும் தகப்பனுக்கும் ஒரு லெட்டர் எழுதினான் "தந்தைசொல்மிக்க மந்திரமில்லை; தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை' யென்று தான் சிறுவயதில் படித்து மனனம் பண்ணிவைத்திருந்த நீதிவாக்கியங்களை நொடிப்பொழுது மறந்து பெற்றோருக்குச் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறியதற்கு தன்னை மன்னிக்கும்படியும் தகப்பனார் கூறிய பிரகாரம் தான் மல்லிகைத் தோட்டத்துக்கு வந்து சின்னத்துரை உத்தியோகத்தை சம்பாதித்துக் கொண்டதாகவும் எழுதினானே தவிர எங்ஙனம் வந்தான் யார் மூலம் உத்தியோகம் பெற்றான் என்ற விபரமொன்றும் எழுதவில்லை தனக்கு உடுப்புகள் அவசியம் வேண்டியிருப்பதால் வீட்டிலுள்ள தனது பெட்டியை உடனே அனுப்பி வைக்கும்படியும் இதர விபரங்களை அடுத்த கடிதத்தில் பார்க்கும்படியும் எழுதிக் கடிதத்தை முடித்து அன்றைய போஸ்டிலேயே சேர்த்துவிட்டு பங்களாவுக்கு அணித்தாக ஓடிக்கொண்டிருந்த ஒரு ஆற்றில் குளித்துவிட்டு வந்தான். அவன் குளித்துவிட்டு வந்தபோது கங்காணி வீட்டுச் சாப்பாட்டு அவனுக்காக காத்திருந்தது சாப்பாட்டை முடித்துக் கொண்டு தனது அறையில்போய் ஒரு சோபாவில் சாய்ந்தான் இரவெல்லாம் நித்திரையில்லாததால் சிலநிமிஷ நேரத்தில் கண்ணயர்ந்து விட்டான்.

மாலை நான்கு மணியளவில் சுந்தரம் நித்திரைவிட்டெழுந்தபோது பக்கத்தறையில் பெண் குரல் கேட்டது. அந்த பங்களாவில் துரையும் அவனுக்கு சமைக்கும் கோக்கியும்மாத்திரமே இருக்கின்றனரென்றெண்ணியிருந்த சுந்தரத்துக்கு பெண்குரல் கேட்டது பெரும வியப்பாக இருந்தது படுக்கையிலிருந்தபடியே பக்கத்து அறையில் நடைபெறும் சம்பாஷணையைக் கேட்க முயன்றான் அவனால் அங்கு நடைபெற்ற சம்பாஷணையைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை


### அரசாங்க விளம்பரம்

**கிருஷிகப் பகுதி**

N. 2358. காடியனுறு சாதனு கிருஷிகப் பாடசாலையில் 1952-53ஆம் ஆண்டு ஒரு வருடப் பயிற்சிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு, மட்டக்களப்பிலிருக்கும், கிழக்குப் பகுதிக் கிருஷிகத் தலைவரால் 3·9 52 வரை மனுப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மனுப் பத்திரங்கட்கும், ஏனைய விபரங்கட்கும் காடியனுறு கிருஷிகப் பாடசாலை மானேஜர் அவர்கட்கு விண்ணப்பிக்கவும்.



### இலங்கை அரசாங்க ரெயில்வே

**லெவல் கிரோஸிங் பழுது பார்த்தல்**

காலி தல்பே ஸ்டேஷன்களுக்கு மத்தியில்மக்குளுவரோட்டில் 74வது மைல் 02 சங்கிலியிலுள்ள (ரெயில் வேமைல்) லெவல் கிரோஸிங் பழுது பார்க்கப்படுவதை முன்னிட்டு வாகனப் போக்குவரத்திலிருந்து முற்றாக மூடப்படும்.

3. 9. 52 புதன்கிழமை இரவு [illegible] முதல் [illegible] முக்கிழமைகாலை 8.00மணிவரை. [illegible] பிரஸ்தா வழியாகப் போக்குவரத்து செய்ய முடியும்.



## சந்திரா போட்டோ

- பாஸ்போட் படங்கள் குறித்த நேரத்தில் கரண்டியுடன் செய்து கொடுத்தல்
- சிறிய படங்களை பெரிதாக்குதல்
- தந்திரக் காட்சிகளுடன் படம் பிடித்தல்
- ஒரே தினத்தில் ரோல் பிலிம் அச்சடித்தல்
- வாழ்த்துக் கார்டுகளில் படம் பதித்தல்
- வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் அனுப்பி வைத்தல்
- வெளியில் வந்து படம் எடுத்தல்
- எனமல் கற்களில் படம் பதித்தல்
- படங்கள் கெட்டுப்போயிருப்பின் சீர்திருத்திக் கொடுத்தல்
- சினிமா சிலேட் வர்ணக் கலர் வேலை செய்தல்

**சந்திரா போட்டோ,**
GEVEART (கிவட்) வினியோகஸ்தர்கள்
68 பூந்தோட்ட ரோட்டு, கொழும்பு போன்: 5737.



## சென்ற் மேரி சர்வாங்க முக்கூட்டு

இது வெகு பிரயாசையின்பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட மலையாளத்து முறை. இதனால் தீரும் வியாதிகள் அடிதல்லு இடிவிச்சுதல் ரெத்தக்கட்டு கை கால் மூட்டுகள், இடுப்பு, முதுகு, மூச்சுப்பிடி, வாய்வுக் குத்து இவைகளுக்கு உண்டாகும் சூலைவீக்கம் இவைகளை உடனே கண்டிக்கும். அனுபவத்தில் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற ஒரு அருமையான முக்கூட்டு ஒருமுறை உபயோகித்து உடனே குணங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**புட்டி விலை ரூபா 2-00.**

கிடைக்குமிடம்:

**சென்ற் மேரி வைத்யசாலை**
201, செட்டியார் தெரு, கொழும்பு.

தலைமைக் காரியாலயம்:

**ஆயுர். டாக்டர் S.S.பெர்ணண்டோ**
இடிந்தகரை.




## இரும்பு பணப் பெட்டிகள்

—o—

**லண்டன் நகர ஜோன்டான லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை**

795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவதுஅதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை.

## டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்.

ஆபீஸ் பொருட்கள் விற்பனைப் பகுதி
18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை, கொழும்பு
போன்: 2301.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# "உத்தமி"

'இளவல்'

புகைவண்டி காற்றைக் கிழித்துக்கொண்டு கொழும்பை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்தது. தலையை வெளியே நீட்டிக்கொண்டிருந்த சங்கரன் கண்களை மூடிக்கொண்டு எதையோ சிந்தித்த வண்ணமிருந்தான்.

ஃ

சங்கரனும், சம்பந்தனும் சிறு வயதிலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். அவர்களிருவரும் பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாம் யாழ்ப்பாணத்தில் தான். எஸ். எஸ். ஸியில் தேறியதும் பெற்றோரின் பூரண சம்மதத்தோடு வேலைதேடி கொழும்புக்குச் சென்றான் சங்கரன்.

எங்கெங்கெல்லாமோ வேலை தேடியலைந்து கடைசியில் புறக்கோட்டையிலுள்ள சிறிய புடவைக்கடையொன்றில் வேலைக்கமர்ந்தான். அப்போதுதான் பட்டணத்தில் வேலை தேடுவதென்றால் அது ஒரு நரக வேதனை என்பது சங்கரனுக்குப் புரிந்தது.

பின்பு பல நாட்கள், பல வாரங்கள், பல மாதங்கள் கழிந்து ஆண்டுகள் இரண்டும் கடந்துவிட்டன. சம்பந்தனுக்கு கொழும்பில் வைத்து திருமணமும் ஆகிவிட்டது. ஆனால் சில அசந்தர்ப்பங்களால் சங்கரனுக்கு தன் நண்பனின் மணவிழாவுக்குப் போகமுடியாமற் போய்விட்டது விடுமுறை நாட்களில் தன் பெற்றோர்களை கண்டுவருவதற்கே நாட்கள் சரியாக இருந்தன. எனவே இரு ஆண்டுகளாக நண்பர்களிருவரும் சந்திக்க முடியாமற்போய் விட்டது.

இரு ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் தன் நண்பன் சம்பந்தனைப் பார்க்கச் செல்கிறான் சங்கரன்.

ஃ

சங்கரனின் சிந்தனை கலைந்தது விழித்துப் பார்த்தான் வண்டி பெருமூச்சு விட்டுக் கொண்டே தன் பாட்டுக்கு போய்க்கொண்டிருந்தது.

சில மணி நேரத்தில் கொழும்பை யடைந்தது வண்டி. வண்டியைவிட்டு இறங்கியதும் தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சம்பந்தனைக் கண்டான். சங்கரனுக்கு நண்பனைக் கண்டதும் ஏற்பட்ட மகிழ்ச்சி விவரித்துமுடியாது. உவகையால் உந்தப்பெற்று, நண்பர்களிருவரும் ஒருவரையொருவர் ஆறத்தழுவிக்கொண்டனர்.

"டேய் சம்பந்! ஆளே மாறிவிட்டாயடா!" என்றான் சங்கரன் சம்பந்தனின் கைகளைப் பற்றிக்கொண்டு.

"நான் எவ்வளவோ தேவலை! நீ ஆளே ஊறிவிட்டாயே!" என்று சிரித்துக் கொண்டே கூறினான் சம்பந்தன். சங்கரனும் அவனோடு சேர்ந்து சிரித்தான்.

பிறகு நண்பர்களிருவரும் என்ன வெல்லாமோ பேசிக்கொண்டனர் இரண்டு வருடப் பேச்சு! அதை விவரித்துமுடியுமா? இரண்டு வருடப் பேச்சில் ஒரு மாத பேச்சை முடித்துக் கொள்வதற்குள் சம்பந்தனின் வீட்டையடைந்தனர் இரு நண்பர்களும்.

சங்கரனை முன் அறையில் உட்காரவைத்துவிட்டு உள்ளே சென்று தன் மனைவியிடம் ஏதோ கூறிவிட்டு மறுபடியும் சங்கரனிடம் வந்தான் சம்பந்தன். விட்ட இடத்திலிருந்து மறுபடியும் பேச்சை ஆரம்பித்தனர்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது சம்பந்தனின் மனைவி சுந்தரி தேனீர் தட்டோடு அவர்கள் முன் காட்சியளித்தாள். சுந்தரியைக் கண்டதும் அவளை சங்கரனுக்கு அறிமுகப்படுத்தினான் சம்பந்தன்

"நான் அடிக்கடி சொல்லி இருப்பேனே சங்கரன் என்று சாட்சாத் அதே சங்கரன் தான் இவர்!"

சுந்தரி புன்முறுவலித்துக் கொண்டே சங்கரனை நோக்கி கை கூப்பினாள்.

"இவர்கள்தான் திருமதி சம்பந்தன்!" என்று தன் மனைவியை சங்கரனுக்கு அறிமுகப்படுத்தினான் சம்பந்தன் சிரித்துக்கொண்டு.

பதிலுக்கு சங்கரனும் சுந்தரியை நோக்கி கை கூப்பினான். சுந்தரிக்கு தன் கணவன் தன்னை அறிமுகப்படுத்திய விதத்தை நினைக்க அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது முகம் குப்பென்று சிவந்துவிட்டது.

சங்கரனுக்கு சுந்தரியைக் கண்டதுமுதல் நினைவு ஒரு நிலையில் இல்லை அவளை முன்பு எங்கேயோ பார்த்த ஞாபகம். நினைத்து நினைத்துப் பார்த்தான்.

சங்கரன் கொழும்பில் இருந்தபோது ஒரு பெண்ணை அடிக்கடி கண்டிருக்கிறான் அவள் ஆடம்பரமான உடை உடுத்தியிருந்தாள். உதட்டிலே சாயமும் பூசி, முகத்திலே வெண்ணிற பௌடர் அப்பி, கன்னங்களிலே செந்நிற பௌடர் தடவி பார்ப்பதற்கு கவர்ச்சிகரமாயிருந்தாள். அவள் தலையலங்காரமும் நாளுக்கொரு தினுசா இருக்கும். இத்தனை நாகரீகப் பூச்சு இல்லாமலேயே அவள் பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். அப்படியிருந்தும் அவள் ஏன் இத்தனை செயற்கையலங்காரங்களையும் செய்து கொள்ள வேண்டும் என்பது அவனுக்கு புரியவில்லை.

அவள் கோட்டையில் ஆங்கில பணிமனையொன்றில் வேலை பார்த்து வந்தாள்.

கடற்கரையில் அந்தி வேளையில் ஒரு வாலிபனுடன் அவள் கைக்கோத்துக்கொண்டு கலகல வென்று சிரித்துப் பேசி செல்வதை சங்கரன் அநேக தடவை கண்டிருக்கிறான். ஒருசில நாட்களுக்குப் பின் ஒரு வாலிபனுடன் காணும் சங்கரன் அடுத்து சில நாட்களில் இன்னொரு வாலிபனுடன் காண்பான் ஆங்கிலப் படமாளிகைகளிலும் வெவ்வேறு ஆண்களுடன் அவள் வருவதையும் சங்கரன் பார்த்திருக்கிறான்.

அப்படிப்பட்டவள் இன்று இருக்கும் நிலை? எவ்வளவு பெரிய மாறுதல்! இன்று நாகரீகப் பூச்சு மருந்துக்குக்கூட காண முடியாமல் எவ்வளவு கவர்ச்சியாக காணப்படுகிறாள்! அவளிடம் காணப்படும் அடக்கமும் ஒடுக்கமும் ஒரு குடும்ப பெண்ணிடம்கூட காண முடியாதே! குடும்பத்தை தான் எவ்வளவு சாதுர்யமாக நிர்வகிக்கிறாள். கணவன் குறிப்பறிந்து எவ்வளவு நாசூக்காக நடந்து கொள்கிறாள்.

சங்கரன் அடைந்த வியப்பு விவரித்து முடியாது! ஆனால்.........சுந்தரி வெளிப்பார்வைக்கு கண்ணகிபாக இருக்கலாம் ஆனால் அவள் நடத்தைக் கெட்டவளாக இருந்தால்? முன்பே அவள் பெண்மை கறைப் படிந்ததாக இருந்தால்? இப்படியும் அவன் மனம் புதிர் போட்டது

அப்படியென்றால் மானங்கெட்டவள் என் நண்பனுக்கு மனைவியா? இப்படிப்பட்டவளை எப்படி மணம் செய்துகொண்டான் சம்பந்தன்? இதை நினைத்துப் பார்க்கவே அவன் மனம் கூசியது

சங்கரனுக்கு இத்தனை கேள்விகளுக்கு விடை தெரிந்தாக வேண்டும். அதை தன் நண்பன்மூலமே கேட்டுத் தெரிந்துகொள்வதென தீர்மானித்துக் கொண்டான்.

ஒருநாள் கடற்கரைக்கு உலாவப்போன சமயத்தில் சங்கரன் "ஆமாம் சம்பந்! நீ செய்துகொண்டது காதல் மணம் என்று மட்டும்தான் எழுதியிருந்தாயே தவிர அதைப்பற்றி ஒன்றும் விபரமாக எழுதவில்லையே" என்று கேட்டான்.

"நீ சரியான ஆளடா! அதை கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு இன்னும் மறந்துவிடாமலிருக்கிறாயே! சரி சொல்கிறேன் கேள்!" என்று கூறிக்கொண்டே அச்சம்பவத்தை சங்கரனுக்கு சொல்ல ஆரம்பித்தான்.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவமிது. ஒருநாள் நான் கோட்டை கடையொன்றில் சில சாமான்கள் வாங்குவதற்காக சென்றிருந்தேன். அங்கேதான் முதன்முதலில் சுந்தரியைக் கண்டேன் அக்கடையில்தான் அவள் வேலை பார்த்து வந்தாள்.

முதலில் என்னைக் கண்டபோது என்னை அப்படியே அள்ளி விழுங்கியிடுவது போல் பார்த்தாள்.

அதற்குப் பிறகு அவளுக்காக நான் அக்கடைக்கு அடிக்கடி செல்லலாரம்பித்தேன். முதலில் கண்கள் பேசி, பிறகு கரங்கள் பேசி, முடிவில் எங்கள் உள்ளங்களை பேசிக்கொள்ள ஆரம்பித்தன நாங்களிருவரும் வெகு விரைவிலேயே அன்பால் பிணைக்கப்பட்டோம்.

சங்கர் இனிமேல்தான் உன்னையே ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப்போகும் ஒரு சம்பவத்தைப்பற்றி கேட்கப்போகிறாய்

எங்களுக்கு மணமாகி சில மாதங்கள் சென்றிருக்கும். ஒவ்வொருநாளும் சுந்தரி என்னிடம் எதையோ சொல்ல வாயெடுப்பாள் ஆனால் சொல்லமாட்டாள் கேட்டாலும் 'ஒன்றுமில்லை' எனக் கூறி தட்டிக்கழித்து விடுவாள்.

ஒருநாள் சுந்தரி அழுது கொண்டிருந்தாள் அதோடு தன் கதையையும் என்னிடம் சொன்னாள் இது தான் அக்கதை. 'நான் நல்ல குடும்பத்திலே பிறந்தவள். நல்லவிதமாகத்தான் வளர்ந்தேன். ஆனால் என் பருவப் பூரிப்பும் இளமையின் துடிதுடிப்பும் என் கண்களை திரையிட்டு மறைத்தன நான் கண்ட கண்ட வாலிபர்களோடுஎல்லாம் கொஞ்சினேன். சுதந்திரப் பறவையைப்போன்று கண்ட கண்ட இடங்களுக்கெல்லாம் சென்றேன். அதற்கு நான் காதல் என்றும் பெயர் வைத்துக் கொண்டேன். நாளைக்கொரு வாலிபர்களை மாற்றிக்கொண்டேன் நாகரிகத்தின் உச்சாணிக் கொப்பு வரை ஏறி இறங்கினேன். பிறவி எடுத்ததே இது போன்ற கோலாகல வாழ்வுக்காகத்தான் என்று எண்ணி இறுமாந்தேன்.

இப்படி மானங்கெட்டு திரிந்த நான் கடைசியில் தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன். உங்களின் கம்பீர உருவமும் களை ததும்பும் முகமும் என்னை தங்களுக்கு அடிமையாக்கின. அதுமட்டுமல்ல. தங்களோடு பழகிய சில நாட்களிலேயே நான் புது சுந்தரியாகிவிட்டேன். நான் இளமையின் இறுமாப்பிலே நடத்திய வாழ்க்கை எவ்வளவு கேவலமானது நீசத்தரமானது என்பதை நினைக்க நினைக்க என் மனசாட்சியே என்னைக் கொல்லாமல் கொன்றது. நான் என் தவறுக்காக கண்ணீர்விடாத நாட்களே கிடையாது.

"என்னை மன்னிப்பீர்களா, சம்பந்த்?" என்று கண்களில் கண்ணீர் ஆறாய் பெருக என் முகத்தைப் பார்த்து கேட்டாள்.

எனக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. நான் அவள்மீது ஆத்திரப்படுவதற்குப் பதிலாக அனுதாபம்தான்கொண்டேன். என் கால்களில் வீழ்ந்துகிடந்த அவளை அன்போடு தூக்கி "சுந்தரி உன்னை கொல்லாமல் கொன்ற மனசாட்சியே உனக்கு மன்னிப்பளித்து விட்டது. நீ செய்தது மன்னிக்கக்கூடாத குற்றமல்ல; சமூகம் நினைத்தால் மன்னித்துவிடக்கூடிய குற்றம் தான். மேலும் உன் வயதில் சராசரி பெண்கள் செய்து விடும் தவறைத்தான் நீயும் செய்திருக்கிறாய். அவர்கள் ஒளித்து மறைத்து செய்வார்கள். நீ பகிரங்கமாகவே செய்திருக்கிறாய். இதுதான் வித்தியாசம்! இதற்காக நீ மனதை அலட்டிக்கொள்ள தேவையில்லை, சுந்தரி' என்று அவள் முகத்தை வாஞ்சையுடன் பற்றிக் கூறினேன்.

அதற்குப் பிறகு நாங்கள் என்றும்போல் மகிழ்ச்சியோடுதான் வாழ்ந்து வருகிறோம்" "சங்கர் சுந்தரி என்னதான் கெட்டவளாக நடந்து கொண்டிருந்தாலும் அவள் ஒரு உத்தமி! நீ என்ன சொல்கிறாய், சங்கர்?" என்று கேட்டான் சம்பந்தன்.

அவனையறியாமலேயே சங்கரனின் வாய் "ஆம்! சந்தேகமேயில்லை. சுந்தரி ஒரு உத்தமிதான்!" என்று கூறியது.




## மறுமலர்ச்சி

வாராந்தர வெளியீடு.

ஆசிரியர்: ஏ. எம் யூசுப்
கிடைக்குமிடம்: பாலக்கரை திருச்சி விலை: 2½ அணா 16 பக்கங்கள்

இப்பத்திரிகையில் அயல் நாட்டுப் பிரச்னைகளும் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றன. எகிப்தில் நடைபெற்ற இரத்தம் சிந்தாத புரட்சியைப்பற்றிய ஒரு கட்டுரையில் புரட்சித் தலைவன் நாகிபின் போக்கில் அதிருப்தி தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மொழிவாரி மாகாணப் பிரிவினையைப்பற்றிய நேருஜியின் கொள்கையை இப்பத்திரிகை வன்மையாகக் கண்டிக்கிறது "வம்பு மடம்" என்ற ஒரு பகுதியில் திராவிடக் கழகத்தினர் பெயர்ப் பலகைகளில் இந்தி எழுத்துகளை அழித்ததை ஆட்சேபித்து ஒரு கிண்டல் சித்திரத்தைத் தீட்டியிருக்கிறது.

சினிமாப் பகுதி பத்திரிகைக்கு ஒரு தனி அழகைக் கொடுக்கிறது. சிறிய எழுத்துகளில் முதலாவது இதழ் கவர்ச்சியாக அச்சிடப்பட்டிருக்கிறது. இன்னும் மாணவர் பகுதி, இலக்கியப் பகுதி முதலிய அம்சங்களும் சேர்க்கப்பட்டால் பத்திரிகையின் தரம் மேலும் உயரலாம்

## தமிழ் மகள்

ஆண்டு மலர் (1952)

ஆசிரியைகள்: திருமதி மா. மங்களம்மாள் செல்வி மா புவனேஸ்வரி தேவி
கிடைக்குமிடம்: 'சாந்தி நிகேதன் வண்ணார்ப்பண்ணை யாழ்ப்பாணம்

இது ஒரு மாதர் வெளியீடு பெண்களுக்குப் பயன் படக்கூடிய கட்டுரைகள் இவ்வெளியீட்டில் இடம் பெற்றிருக்கின்றன 'நல்ல பெண்கள் எப்படி இருப்பார்கள்" என்ற தலைப்புடன் மிஸ் அன்னரெத்தினம் எழுதியிருக்கும் கட்டுரையும் "பாரதியாரும் பெண்களும்" என்ற கட்டுரையும் கட்டாயமாக வாசிக்கப்பட வேண்டியவை பிரபல எழுத்தாளர் டர்பன் திரு மூனிசாமிப்பிள்ளையும் நமது கலைச் செல்வத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் அஹிம்சா மூர்த்தி காந்திஜீயின் படம் வெளியீட்டின் அட்டையை அலங்கரிக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "உங்கள் போராட்டம் எங்கள் போராட்டம்

# தமிழ் பேசும் மக்களில் வேற்றுமை கிடையாது"

## பதுளையில் தமிழரசுத் தலைவர்




"என் அருமைத் தமிழ் மக்களே, நானும் உங்களில் ஒருவன்தான். என்னை அறிமுகம் செய்து வைக்கையில் உங்கள் தலைவர் திரு எஸ் எம் சுப்பையா ஒரு சிறு தவறு செய்து விட்டார். நான் வேற்றவனாயிருந்த போதிலும் உங்கள் உரிமைக்காக தொடர்ந்து போராடிவந்த ஒருவன் என்று அவர் கூறினார். நான் வேற்றவன் அல்ல. நானும் உங்களில் ஒருவன்தான். இலங்கைத் தமிழர்கள் வேறு இலங்கை-இந்தியத் தமிழர்கள் வேறு என்று நானோ என் கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சியோ ஒரு போதும் கருதவில்லை: நாம் எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்நாட்டு தமிழ் பேசும் மக்கள்" என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பதுளை நகரசபை மைதானத்தில் கூடிய இலங்கை இந்தியக் காங்கிரஸின் மாபெரும் கூட்டத்தில் பேசிய திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது: "சகோதரர்களே, உங்களுடைய அமைதியையும் கட்டுப்பாட்டையும் பொதுக் கூட்டத்தில் மிக்க பண்பாட்டோடு கலந்துகொள்ளும் உங்கள் ஒழுங்கையும் பார்க்கும்போது நான் பெருமிதமடைகிறேன். மகாத்மா காந்தியடிகள் போதித்த அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு சாந்தமாகவும் சாத்வீகத்துடனும் நடத்தும் சத்தியாக்கிரகப் போராட்டம் இறுதியில் பரிபூரண வெற்றியை உங்களுக்கு அளிக்கும். 1921ல் காந்தி மகாத்மா ஒத்துழையாமையென்னும் சத்தியப் போராட்டத்தை ஆரம்பித்தபோது "பலம் பொருந்திய பிரிட்டிஷாருக்கெதிரே அந்தப் போராட்டம் என்ன செய்து விடும்?" என்று இங்கு கூடப் பலர் ஏளனஞ் செய்தனர். காந்தீயப் போராட்டம் உலகம் அதிசயிக்கும் வண்ணம் வெற்றிபெறுவது சர்வ நிச்சயம் என்று நான் அப்போது கூறினேன். அதுபோலவேதான் இப்போதும் கூறவிரும்புகிறேன். உங்கள் போராட்டம் தர்ம நியாயமானது. அது வெற்றிபெறுவது நிச்சயம். உங்கள் போராட்டம் எங்கள் போராட்டம் உங்கள் வெற்றி எங்கள் வெற்றி. அது இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வெற்றி எனவே உங்கள் போராட்டத்திற்கு எங்கள் ஆதரவு என்றென்றும் உண்டு. எங்கள் கட்சியின் ஆதரவு எப்போதும் போல் உண்டு"

ஜனாப் ஏ. அஸீஸ் பேசுகையில் கூறினார்: "இலங்கை இந்தியர்களுக்கு உழைப்பதாக உறுதி கூறிவிட்டு கடைசியில் பதவி மோகத்தால் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்ட பலர் இருக்கிறார்கள் ஆனால் திரு செல்வநாயகம் அப்படிப்பட்டவரல்ல ஆரம்ப முதல் கொண்டே பாராளுமன்றத்துள்ளும் வெளியிலும் இலங்கை இந்தியரின் உரிமைக்காக அவர் பாடுபட்டு வருகிறார் உண்மைக்கும் நேர்மைக்கும் பெயர்பெற்ற இத்தலைவர் இலங்கை இந்தியரின் நலவுரிமைக்காக அந்தரங்க சுத்தியுடன் உழைக்கிறார் என்பதில் யாருக்குமே சந்தேகமிருக்க முடியாது. ஆயிரக்கணக்கில் 'பீஸ்' வாங்கும் ஒரு சட்ட நிபுணராயிருந்தும் எதுவித ஊதியத்தையும் எதிர்பார்க்காமல் இலங்கை இந்தியர் வாக்குரிமை வழக்குகளை அவர் இனாமாக நடத்தியதே அவருடைய சேவையின் பெருமையை எடுத்துக்காட்டுகிறது இப்படிப்பட்ட ஒருவரின் அனுதாபமும் அவர் கட்சியின் ஆதரவும் நமக்கு கிடைத்திருப்பது பெரும் பாக்கியமாகும். நாம் உறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் தியாக சிந்தையுடனும் போராடினால் நமது உரிமைகளை இந்நாட்டில் நிலைநாட்டுவது கஷ்டமானதல்ல திரு செல்வநாயகம் கூறியபடி ஒரு நாட்டிலுள்ள சிறிய இனத்தை பெரிய இனம் விழுங்கி ஏப்பம்விடப் பார்ப்பது சரித்திரபூர்வமான உண்மைதான. ஆனால் எந்தப் பெரிய இனமாயிருந்தாலும் சரி, துணிவும் தீரமும் சிறிய இனத்திடம் உதிக்க முடியுமானால் அந்த சிறிய இனத்தை அசைக்க முடியாது. சட்டங்களினாலும் அடக்குமுறைகளினாலும் அதன் உரிமைகளைப் பாதிக்க முடியாது"

கூட்டத்திற்கு திரு எஸ் எம் சுப்பையா தலைமை வகித்தார் ஜில்லா பொதுக் காரியதரிசி திரு ஏ. கே கந்தசாமி உட்பட வேறு பலரும் பேசினார்கள்

### அழகுமலையில் தேர்தல் கூட்டம்

நமுனுகொலையைச் சேர்ந்த அழகுமலைத் தோட்டத்தில் கடந்த 18-8-52ல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் கூட்டம் ஜில்லா பொதுக் காரியதரிசி திரு ஏ கே கந்தசாமி தலைமையில் நடைபெற்றது

நடப்பு வருடத்திற்கு கீழ்க்கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: ஏ. எஸ் வேலு, உபதலைவர்கள்: ஏ. எம் வெள்ளைச்சாமி, எம். கே. கருப்பையா கூட்டுக் காரியதரிசிகள்: டி. கே. தர்மலிங்கம், எஸ். சிங்காரம் பொக்கிஷதார்: நா. மொகமது சாஹிபு, கமிட்டி மெம்பர்கள்: 12 பேர்கள்.

### ரெலுகஸ தோட்டம் இ. இ. கா கூட்டம்

பண்விலையைச் சேர்ந்த ரெலுகஸ் தோட்டத்தில் கடந்த 17 8-52ல் இ. இ. கா தோட்டக் கமிட்டியின் வருடாந்த தேர்தல் கூட்டம் ஜில்லா உப தலைவர் திரு எம பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. பலர் சொற்பொழிவாற்றிய பின்னர் கீழ்க்கண்டவர்கள் தோட்டக் கமிட்டி நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கே பெரியசாமி, உப-தலைவர்: என். வி ராமையா, காரியதரிசி: எம் சிவனு, பொக்கிஷதார்: ஏ. வி சின்னசாமி சங்காணி. சமிட்டி மெம்பர்கள்: 17 பேர்கள், தொண்டர்கள்: 6 பேர்கள்.

### வெலகெதரையில்

போகவந்தலாவையைச் சேர்ந்த வெலகெதரை தோட்டத்தில் கடந்த 20-7-52 ஜில்லா தலைவர் திரு எஸ் எஸ். பெர்னாண்டஸ் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது

ஜில்லா காரியதரிசி திரு என், கே நாகப்பன், ஜில்லா உபதலைவர் திரு வி. எஸ். ராமசாமி, தோட்டத் தலைவர் திரு கே. கந்தசாமி ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள்.

# நாத்திகம் எது?

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ஆத்திகத்தின் மாற்ற நிலை; ஆத்திகம் அழுகி வெளிப்படும் நாற்றமே நாத்திகம். பழம் இல்லாவிடில், அதன் நன்மை அழுகாவிடில், நாற்றமேது? இனிமையின் அடியில் எழும் சமயத்தில் ஊழலும் மூடநம்பிக்கையும் முதிர முதிர அதுவே நாத்திக நாற்றமாக மாறுகிறது. 'என்று நீ அன்று நான்' என்றதுபோல, என்று ஆத்திகம் பிறந்ததோ அன்றே நாத்திகமும் அதனில் மறைந்திருந்தது இதை உலகின் சமய வரலாறுகளும் உரைக்கும்! அழுகிய பழத்தை அப்படியே வைத்துக்கொண்டு, மூக்கையும் ஜன்னலையும் மூடித் தடுத்தால் நாற்றம் நீங்காது. அழுகியதனை அப்பால் எறியவேண்டும்: மற்றொரு நல்லதை அங்கு வைக்க வேண்டும் அதாவது சமயத்தைத் தத்துவத்தின் (முதல் தோன்றிய பாதிரி) அடிப்படையில் மாற்றியமைக்க வேண்டும். காலத்திற்கேற்பத் திருத்த வேண்டும். உலகச் சமய வளர்ச்சி இதனை உணர்த்தும். பிராடஸ்டன்ட், இஸ்லாம் நெறி, பிரம்ம ஞான, பிரம்ம சமாஜ நெறிகள், புத்தம், அருட்சோதி வழிபாடு இவை யாவும் ஏன் தோன்றின? ஆத்திகத்தில் தோன்றிய நாற்றத்தை அகற்றவேதான்!

சிலுவைப் போர், இங்கிலாந்தில்—ஐரோப்பாவில்—கத்தோலிக எதிர்ப்பில் நடந்த அரசியல் கொலைகள், மகம்மது நபி மைப் பலியிடைத்தது, கிறிஸ்துவைச் சிலுவையிலடித்தது, இந்தியாவில் நால் வருண வேற்றுமையும், உயிர்க் கொலை வேள்வியும் கொண்டது—இவையெல்லாம் ஆத்திகம் என்ற பேரால் வெயிலில் நடந்த அட்டூழியமன்றோ? இவை நாற்றமன்றோ! இவற்றை எடுத்துரைப்போர் மேலே அந்நாற்றமடிப்பது இயற்கை. ஆனால் அவர்கள் நாத்திகரல்லர். உலகில் நாத்திகப்பட்டம் பெற்றார் யாவரும் 'கடவுள் ஒருவர் இல்லை'யெனக் கூறியதே இல்லையெனலாம் இங்கர்சால், வால்டேர், பெர்னாட்ஷா இவரைப் படித்துயானறிந்ததிதுவே.

'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என வள்ளலார் உரைத்தார் கடவுளைப் பற்றியே பேசவில்லை புத்தர் பெருமான் டால்ஸ்டாவைவிடச் சமய ஊழலை அவ்வளவு அதிகமாக யார்தான் கண்டிக்க முடியும்? இவர்களையெல்லாம் நாத்திகரெனலாமா? அவர் தம் வாழ்வெல்லாம் நல்லஅறவாழ்வு! இன்று, மக்கள் நலன்களுக்கு முட்டுக்கட்டையிடுவோரெல்லாம் ஆத்திகர் (என்னும் நாத்திகர்தாம்).

உணமைச் சமயம் என்றும் நாத்திகத்திற்கு அஞ்சியதே கிடையாது. உலகாயத, பௌத்த மதங்கள் பழையவை உலகில் அறமழிந்து மறமோங்கிய காலத்தில் தோன்றும் ஆண்டவன், 'நாத்திகனாகவே தோன்றுகிறான்' என்பேன். ... பத்தில் அவனை எண்ணுவ...

போது சோற்றை வெறுப்பது இயற்கைதானே? எனவே, ஆத்திகமும் நாத்திகமும் நாட்டு வாழ்வில் தோன்றும் இயற்கை எண்ணங்கள்; அவற்றைத் தடுக்கவும் முடியாது

'இந்திய மக்கட்குச் சோறும் உடையும் இடமும் போதிய அளவு கிடைக்கும்வரைக் கடவுளைப் பற்றியோ, தத்துவங்களைப்பற்றியோ நமக்குக் கவலையில்லை' என அறிவியல் மாநாட்டில் பண்டித நேரு கூறியது முற்றும் உண்மை.

மனித இனம் அறிவில் உயர உயர அதாவது கடவுள் தன்மையில் பெருகப் பெருக கடவுளை (உருவத்தை) நினைப்பதும் குறையவே செய்யும். உண்மையில் கம்யூனிஸம் முற்றிய போதோ டால்ஸ்டாய் 'கடவுள் வானரசு' உலகில் மீண்டும் நிலைக்கும்போதோ மக்களில் பெரிதும் கடவுள் நினைவற்றோர நாம் கருதும் நாத்திகராகவேயிருப்பர். செல்வம் பரவிய ரஷியரிடத்தும், அறிவு சிறந்த விஞ்ஞானியர்டத்தும் இன்றே அதனைக் காண்கிறோம்; மனிதன் கடவுள் தன்மையை அடைய அடைய வேறு கடவுள் நினைவை மறக்கிறான். உலகச் சமயப் பெரியாரும் இதனை ஒப்புகின்றனர். அது இனி பெரிதும் உலக முழுதும் எல்லோர்க்கும் அடையும் நிலையாகலாம்.

இதனால் நான் உருவ வழிபாட்டை மறுக்கிறேன் ... டில் அதனைக் கடவுள் தன்மையடைய ஒரு 'கட்டளை' யாகக் கொள்ளவில்லை. ஆனால் இரண்டில் ஒரு நெறியாகக் கொள்கிறேன். மற்றொன்று அறிவு நெறி (ஞான நெறி) அதாவது, உருவ வணக்கத்தைக் கருதாத காரணத்தால் நாத்திகப் பட்டம் பெறுவோர் (அறியாமலே) பற்றும் நெறி ஆனால் இவர்கள் பெர்னாட்ஷா கூறுகிறபடி இரத்தமும் எலும்புங்கொண்ட உருவத்தை வழிபடுகிறார்கள் புத்தம், கிறித்தவம், இஸ்லாமியமும் கூட சமயத் தலைவரையே வழிபடுகின்றன.

பற்றுக்கோடு கொண்டு வளரும் செடிபோன்றது ஆத்திகம். ஆனால் அறிவும் துணிவுமின்றி நாத்திகராக முடியாது. ஆகவேதான் உலகில் என்றும் நாத்திகம் சிறுபான்மையாகவே இருந்திருக்கிறது; ஆனால் என்றும் இல்லாமல் இருந்ததுமில்லை.

பிள்ளைப் பருவத்திலேயே திணிக்கப்பட்டு வெறும் நம்பிக்கையால் 'கடவுள் உண்டு' என்பதைவிட படித்து, நினைத்து, புரிந்து, அறிவால் கடவுள் நினைவை வளர்ப்பதே உண்மையான வளர்ச்சி ஆத்திகம். விவேகானந்தர் வாழ்வு அப்படியே வளர்ந்தது. அறிஞர் நியூமன் கண்ட பல்கலைக்கழக மாணவராக இளைஞர் ஆகவேண்டும். இன்று நாட்டில் உயர்நிலைக்கழக கல்லூரி மாணவர் யாவரும் இத்தகுதியடைபக்கூடிய பொது அறிவுடையராய்விட்டனர். இனித் திணித்து நம்ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்ஷத்திரக் காதல்!

(ஏ. எம். மீரான்)

நக்ஷத்திரங்களின் காதலை நினைக்கும்போது சிரிப்புத் தான் வருகிறது சில அப்பாவி நக்ஷத்திரங்கள்கூட இந்தக் காதல் தகராறுகளில் மாட்டிக்கொள்கிறார்கள் வெளியாரின் புரளிக்குப் பயந்தே காதல் செய்வதாகக் காட்டிக்கொள்கிறார்கள். சமீபத்தில் தேவ் ஆனந்தும் கீதாபாலியும் இரவு தாங்கள் இருவரும் நடிக்கும் படத்தின் ஷூட்டிங் முடிந்து வீடு திரும்புகையில் கார் விபத்துக்குள்ளாகிவிட்டனர். ஒரு பத்திரிகை இதை நக்ஷத்திரக் காதலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு "இன்னும் ஒரு தடவை அவர்களிருவரும் கார் விபத்தில் சிக்கிவிட்டால் போதும் இருவரும் காதலர்களாகிவிடுவார் என்று குறிப்பிட்டுள்ளது. கீதாபாலியும் தேவ் ஆனந்தும் ஷெட்டுக்குள் வரும்போதெல்லாம் டைரெக்டர் முதல் 'க்ளாப்பர்பாய்' வரை சந்தேகக் கண்ணோடு தான் பார்க்கின்றனர். பொறுத்திருந்து பார்க்கலாம்.

### ரஞ்சன்

சமீபத்தில் ரஞ்சன் பம்பாயில் சினிமா நக்ஷத்திரங்கள், டைரெக்டர்கள், படத் தயாரிப்பாளர் மற்றும் சினிமா சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் தமது பங்களாவில் விருந்தொன்று நடத்தினார் விருந்துக்கு எல்லோரும் வந்துவிட்டனர். 'சின்பாட் தி செய்லர்' படத்தில் தன்னுடன் நடிக்கும் அழகு ராணி நஸீமை ரஞ்சன் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். கடைசியில் அவர் வருவதற்கு அறிகுறியாக அவரது கார் தெருக் கோடியில் தெரிந்தது ரஞ்சன் குதித்துக் கொண்டு வெளியே ஓடி நஸீமை அப்படியே குழந்தையைப் போல் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார். இவ் விஷயம் அங்கிருந்தவர்களுக்குள் சிறிது 'கச முச' பேச்சோடு நின்றுவிட்டது.

சமீபத்தில் ஒரு வதந்தி கிளம்பியிருக்கிறது. "நிஷான் டங்காவில்" தன்னுடன் நடித்துவரும் நடிகை ஷியாமளாவுடன் ரஞ்சன் நெருங்கிப் பழகுவதாக ஹிந்தி படவுலகில் ஒரே புரளியாகக் கிடக்கிறது. இதை அவ்வளவாக நம்ப முடியவில்லை.

### பிரேம்நாத்

ப்ரேம்நாத் இருக்கிறாரே மகா ரகசியப் பேர்வழி மேற்கண்ட நக்ஷத்திரங்களைப்போல் தமது காதல் விஷயங்களை பத்திரிகைக்காரர்களின் கண்களில் எட்டவிடாமலே தமது காரியத்தை முடித்துக்கொண்டுதான் விஷயத்தை வெளிக்குச் சொன்னார் அவுரத்தில் தன்னுடன் நடித்து வரும் பீனாராயை மணந்து கொள்ள நிச்சயித்திருப்பதாக சில நாட்களுக்கு முன் தெரிவித்தார். அதற்கடுத்த சில நாட்களுக்குள் நிச்சயதார்த்தத்தையும் நடத்திவிட்டார். நவம்பரில் திருமணம் எப்படி? இருந்தாலும் இவ்வளவு ரகசியமாக இருக்கக்கூடாது.

### சுரையா

இதற்கு நேர்மாறாக நடந்துவிட்டார் டைரெக்டர் சாதிக். தான் சுரையாவைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக சுரையாவிடமே தெரிவித்துவிட்டார். சுரையாவுக்கு பிரமாத கோபம் வந்துவிட்டது. 'சன்னு பின்னு' வென்று திட்டி சாதிக்கின் கோரிக்கையை அடியோடு மறுத்துவிட்டார். சாதிக் மிக வருத்தத்தோடு 'சுரையா உனக்காக, உன்னை விளம்பரப்படுத்தமட்டும் 8 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறேன். இந்த நன்றிக்காகவாவது சாந்தமாகப் பதிலளிக்கக் கூடாதா" என்று இரங்கத்தக்க முறையில் நாடக பாணியில் கேட்டார். என்ன இருந்தாலும் சாதிக் இம் மாதிரி நடந்திருக்கக் கூடாது.

### நஸீர்கான்

திலீபகுமாரின் தம்பி நஸீர்கான் இருக்கிறாரே அவர் ரோஷக்கார மனிதர் நூடன் சயரத்துடன் தொடர்ந்து ஏழெட்டுப் படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு நடித்தும் வட்டார். இது யாருக்கோ பொறுக்கவில்லை. நூடனின் தாயார் சோடனா சமர்த்திடம் கைச்சரகலகக் கொஞ்சம் சேர்த்து யாரோ கதை கட்டினர். சோபனா சமரத் தான் சினிமா உலகில் அனுபவப்பட்டவராயிற்றே. இப்போது தமது மகளின் ஒப்பந்தங்களைத் தாமே மேரிலேயே கவனித்து கதாநாயகன் தமக்குப் பிடித்தமானவராக இருந்தாலே நடிக்க அனுமதி கொடுப்பாராம். இதைக் காதல் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் இது பத்திரிகைக்காரர்களின் கண்ணுக்குக் காதலாகத்தானே தெரிகிறது! இப்போது சோபனாவுக்கு நஸீர்கான் மீதுள்ள சந்தேகம்பாய் லஜஜை மீது வழுந்துவிட்டது! நஸீர்கான் இப்போது நூடனுடன் நடிப்பாரா என்பது சந்தேகமாக இருக்கிறது

காதல் முற்றிக் கல்யாணம் செய்துகொண்ட நட்சத்திரங்களை மட்டும் சொல்லிவிட்டு நமது தமிழ் நட்சத்திரங்களைப் பற்றி அடுத்த வாரத்தில் தெரிவிக்கிறேன்.

நடிகை நிகார் சுல்தானா டைரக்டர் யூசுபை மணந்து இருவரும் சொந்தப் படம் எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

நடிகை மீனா டைரக்டர், படத் தயாரிப்பாளர் சூப் கேஹோரியை மணந்து ஐந்து வயதில் ஒரு குழந்தை இருக்கிறது.


நடிகை சர்தார் அக்தர் டைரக்டர் மெஹ்பூபை மணந்து, கணவருக்கு வலது கரம்போல் விளங்கி வருகிறார்!

சசிகலா, சினிமா உலகப் பிரமுகர் ஒருவரை சமீபத்தில் மணந்துள்ளார்.

திலிப்—மதுபாலா விவாகம் நடப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டு மறைந்து விட்டது!

பிரேம்நாத்—பீனா ராய் திருமணம் நவம்பரில் நடக்கவிருக்கிறது.


கொதிக்கும் வெயிலிலும்
கொட்டும் மழையிலும் சிக்கித்
தவிக்கிறீர்களா ?
இதோ
ஒட்டக மார்க் குடை
களில் ஒன்றை
இன்றே வாங்கிக்கொள்ளுங்கள்




ரெஜிஸ்டர் நம்: 12330

★ உயர்ந்த குடை
★ குறைந்த விலை
★ ஒட்டக மார்க் குடை

நீண்ட நாள் உழைப்பிற்கும் உங்கள் பணத்திற்கும் இன்று உலகில் உத்தரவாதமளிக்கும் ஒரே குடை.

இலங்கையில் இப்போது அதிகமாக விற்பனையாகிறது

ஐக்கியா டிரூப்பர் ஸ்டோர்ஸ்
6, சைனா வீதி, கொழும்பு-11.
போன்: 5113.





### மனோஹரா

கடந்த வாரம் நான் நெப்டியூன் ஸ்டுடியோவுக்குச் சென்றேன். எப்போதும் உஷாராக காவல்காத்துக்கொண்டிருக்கும் கூர்க்கா உள்ளே எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். நான் ஸ்டுடியோ வாசலை நெருங்கியபோது தான் எனக்கும் விஷயம் விளங்கியது.

அன்று மனோஹராவுக்கான வாள் சண்டைக் காட்சி ஒன்று பிடிக்கப்பட்டது. வடநாட்டு நடிகர் ஜீவனுக்கும் எம். ஜி. ராமசந்திரனுக்குமவான



எம். ஜி. ராமச்சந்திரன்

சண்டை நடந்தது—சினிமாவுக்காகத்தான் ஜீவன் தனது திறமையைக் காட்ட ராமச்சந்திரனின் சட்டையை தனது வாளால் கிறிவிட்டார் ராமச்சந்திரனும் விளையாட்டாகவே தமது வாளைக்கொண்டு ஜீவனின் சட்டையில் எக்ஸ் அடையாளமாகக் கிழித்துவிட்டார். ஜீவனுக்கு இது கோபத்தை மூட்டி விட்டது. மீண்டும் தனது வாளால் ராமச்சந்திரனின் உடை மேலிருந்து கீழாகக் கிழித்துவிட்டார். இவ்வளவும் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது தான் டைரெக்டருக்குக் குஷியாகிவிட்டது. கேமராமேனைப் படம் எடுக்க விட்டுவிட்டார். அவர்கள் இருவரும் ஆக்ரோஷத்தோடு சண்டையிடுவதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார்.

ராமச்சந்திரன் விடவில்லை ஆத்திரத்தோடு வாளை இங்குமங்கும் வீசினார். கடைசியில் ஜீவனின் வாளையே இரண்டாக ஒடித்துவிட்டார். அப்படியிருந்தும் ஜீவன் தனது ஒடிந்த வாளை வைத்துக்கொண்டு சண்டையிட ஆரம்பித்தார். ராமச்சந்திரனின் வாள் வீச்சின் வேகம் ஜீவனை விழிபிதுங்கவைத்துவிட்டது டைரெக்டருக்கு இப்போதுதான் உணர்வு வந்தது. உடனே ஓடிப்போய் ராமச்சந்திரனைப் பிடித்துக் கொண்டார் விளையாட்டாக நடந்தது வினையாகவே முடிந்துவிடப் பார்த்தது. பின்னர் இருவரும் சமாதானப்படுத்தப்பட்டனர்.

இந்த ஒரு காட்சியிலிருந்து மனோஹரா எப்படியிருக்குமென்று நீங்களே முடிவுகட்டிக் கொள்ளுங்கள். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட எல்லா சண்டைப் படங்களையும்விட மனோஹராவில் வாள் சண்டை பிரமாதமாக இருக்கும் என்று அன்றைய ஷூட்டிங்கைப் பார்த்த எல்லோரது அபிப்பிராயம்—நான் உட்பட.

### பணக்காரி

பிரபல ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாயின் அன்னா கரெனினாவைத் தமிழில் பணக்காரி என்ற பெயருடன் எடுத்து வருகின்றனர். அன்னாவாக டி. ஆர். ராஜகுமாரியும், கரெனினாகவும், அன்னாவின் காதலனாக எம். ஜி. ராமச்சந்திரனும் நடித்துவருகின்றனர், படத்தின் முக்கிய காட்சிகள் நீலகிரியின் அழகிய மலைச்சாரல்களில் பிடிக்கப்பட்டுவருகிறது. படம் நியூடோனில் வளர்ந்துவருகிறது. பாதி முடிவடைந்துவிட்டது.

### புது வாழ்வு

பாகவதரின் சொந்தப் படமான "புது" வாழ்வு வளரும் வேகத்தைப் பார்த்தால் செப்டம்பர் மத்தியில் வெளிவந்துவிடும் என்று தெரிகிறது பாகவதர், லலிதா ஆகியோர் முக்கிய பாத்திரங்களாக நடிக்கின்றனர் கே. பி. ரங்கநாதன் டைரக்ஷனில் நியூடோன் ஸ்டூடியோவில் வளர்ந்துவருகிறது.


### யு. என். பியின்..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னைக் காட்டிக்கொள்ளும் நிரந்தரக் காரியதரிசி அந்த இடத்தை வந்து பார்த்தார் இந்த நிரந்தரக் காரியதரிசி பழைய கோவிலின் அத்திவாரத்தைக் காட்டும்படி எம்மைக் கேட்டார் போர்த்துக்கீசர் அதை அழித்த பிறகு, அக்கோயிலின் கற்களைக் கொண்டு டச்சுக்காரர் கோட்டையைக் கட்டிய பிறகு, சமீபத்தில் பிரித்தானியா வீடுகளையும் சேமிப்பு நிலையங்களையும் கட்டிய பிறகு எமது நிரந்தரக் காரியதரிசி திருகோணமலைக்கு வந்து பழைய கோயிலின் அத்திவாரத்தைக் காட்டும்படி கேட்கிறார் இது இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா முழுவதிலும் ஓர் குறையாகக் கருதப்படும் இக்குறையைத் தர்சுப பிரதம மந்திரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான ஐந்தாவது வாரம்!



## சென்ட்ரல் (கொழும்பு)

ஞாயிறுக் காட்சிகள் காலை 10-மணி பிற்பகல் 2-30, 6 மணி 9-30 மணிக்கு மற்றைய நாட்களில்: வழமைபோல 6-மணிக்கும் இரவு 9-30 மணிக்கும்.



## மகேந்திரா (யாழ்ப்பாணம்)

இன்று காலை 10-15 மணிக்கும் மாலை 6-15, 9-30 மணிக்கும்

## ஜோதி (திரிகோணமலை)

இன்று பகல் 2-30, மாலை 6-15, 9-30 மணிக்கும்

# ★ காதல் ★

## பானுமதி - நாகேஸ்வரராவ் - கிருஷ்ணமூர்த்தி.


★ காதல் மென்மையான மலர். காமுகர்கள் கையில் அகப்பட்டால் அது கசங்கிய ரோஜாவாகிவிடும்.
★ ஆனால் உள்ளங்கள் இரண்டு அன்பினால் ஒன்றுபடும் போது அதில் தெய்வீகத் தன்மை பிரகாசிக்கிறது.
★ பட்டிநாட்டு மங்கை மோதி - மணம்வீசும் முல்லைமலர்ஹாரம். அதைக் குரங்கின் கழுத்திலே போட்டால்........
★ நீலமலைச்சாரலில் ஓடியாடி கட்டற்று துள்ளி விளையாடிய கன்னி தன் வாழ்விலே குறுக்கிட்ட ஓர் ராஜாவைக் கண்ணி வைத்தாள்
★ வானமெங்கும் இஷ்டம்போல் சிறகடித்துப் பறந்து செல்லும் பஞ்சவர்ணக்கிளி மோதி, திருமணம் என்ற இரும்புக் கூட்டிலே அடைபட்டாள் அதன்விளைவாகக் காதல் பீடத்தில் அவள் கொடுத்த உயிர்ப்பலியின் எதிரொலியானது எங்கெங்கும் முழங்கிறது.

# முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

## வெற்றிகரமான 3-வது மாதம்

## ஆரம்ப முதல் ஆயிரக்கணக்கானோர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள்

# என் தங்கை




பணத்தாசையால் ஒரு குடும்பத்தையே அடியோடு பாழாக்கினான் சுயநல சூழ்ச்சிக்காரன் ஒருவன். ஆனால் அவன் பிள்ளை மூர்த்தியோ ஓர் பரோபகாரி. தந்தையின் ஸ்தானத்திலும் தாயின் ஸ்தானத்திலும் இருந்து அன்னையையும் தம்பி-தங்கையையும் அணைத்து ஆறுதல் கூறும் அண்ணனின் தியாக வாழ்வு மகத்தானது. வாழ்க்கையின் வஸந்தப் பருவத்தில் கண்ணை இழந்து பரிதவிக்கும் அபலைப் பெண் கமலாவின் கண்ணீர் இதயத்தை வாள்கொண்டு அறுத்து நம் கண்ணீரையும் பெருக்க வைக்கிறது. தங்கையின் கண்ணீருடனும் தமையனின் கஷ்டத்துடனும் நம் உள்ளமும் சேர்ந்துகொண்டு அழுகிறது அது மட்டுமா? மூர்த்தியின் ரிக்ஷாவுடனும் வேலைக்காரனின் கோலாகலக் காதலுடனும் சேர்ந்துகொண்டு விடாத நகைப்பையும் மூட்டுகிறது.

## நடிக நடிகைகள்:

எம். ஜி. ராமச்சந்திரன், மாதுரிதேவி,
பி. எஸ். கோவிந்தன், வி. சுசீலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இன்சொல்

இன்சொல் என்பது பிறருக்கு எவ்வகையிலேனும் துன்பம் வராமல் இருக்கும்படி பேசப்படுவதேயாம். உலக மக்கள் ஒவ்வொருவரும் தாங்களாகவே ஒரு காரியத்தைச் செய்ய இயலாது ஒரு பணக்காரர் ஒரு ஏழையின் உதவியை நாடியே இருக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் இனிய சொற்களைப் பேசியே தீரவேண்டும்.

இன்சொல்லைப் பேசுவதனால் ஒருவர் எல்லா நன்மைகளையும் அடையலாம். கோபம் முதலிய கொடிய பேய்களை அகற்றுவதற்கும் இன்சொல்லைப் போன்ற ஒரு மருந்து இல்லையென்றே சொல்லவேண்டும். இனிய சொற்களைப் பேசுவதனால் பகை ஏற்படாது. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட ஒவ்வொருவருக்கும் இன்சொல் மிக அவசியம். ஒருவர் இனிய சொற்களைச் சந்தர்ப்பம் பார்த்துப் பேசவேண்டுமென்பது கட்டாயமில்லை. எப்போதும் எந்நேரத்திலும் இனிய சொற்களையே பேசவேண்டும். ஒருவருக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தாலும் அவர்களிடைத்தற்கரிய இனிய சொற்களைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் அவைகளால் ஒரு பயனுமில்லை.

ஆகையால் மாணவர்களாகிய நாம் ஒவ்வொருவருக்கும் எப்போதும் எந்நேரத்திலும் எவருக்கும் இன்சொல்லே பேசி மகிழ்ந்து இன்சொற்களை நிலைநாட்டுவோமாக!

கே. எஸ். கே. சுந்தரம்
அரசினர் கனிஷ்ட பாடசாலை
ஏருவூர், செங்கலடி

## கலீலியோ

இவர் இத்தாலி நாட்டிலுள்ள பிளாரன்ஸ் என்ற நகரத்திலே கி. பி. 1564-ம் ஆண்டில் பிறந்தார்.

கலீலியோ கணிதநூலில் மட்டுமின்றி வானநூலிலும் சிறந்து விளங்கினார். வானநூல் ஆராய்ச்சியின் பயனாக 'தொலைநோக்கி' என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். தொலைநோக்கி மூலம் ஆகாயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். ஆராய்ச்சியின் பயனாக நிலவிலே காடுகள் இருப்பதையும் பள்ளத் தாக்குகள் நிறைந்திருப்பதையும் கண்டார்.

கலீலியோ மென்மேலும் ஆராய்ச்சி செய்தார். அதன் பயன் சூரியன் அசைவற்றதென்றும் பூமி சூரியனைச் சுற்றி வருகிறதென்றும் அத்துடன் பூமி தன்னைத் தானே சுற்றி வருகிறதென்றும் கூறினார். தெர்மாமீட்டர் என்னும் சூடறியும் கருவியையும் 'காம்பாஸ்' என்ற திசையறியும் கருவியையும் கண்டுபிடித்தார். மேலும் நோயாளியின் இரத்த ஓட்ட அளவைக் காட்டும் நாடி அளக்கும் கருவியையும் கண்டுபிடித்தார். இவர் தமது அறுபதாம் வயதில் தனது ஆராய்ச்சி முடிவுகளை எல்லாம் ஒன்று திரட்டி ஓர் நூலாக வெளியிட்டார். இவரின் கருத்துகளெல்லாம் கிறிஸ்துவ மதக்கோட்பாடுகளுக்கு முரணபாடானவை எனக்கூறி இவர்மீது குற்றஞ் சாட்டி இவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆராய்ச்சி அரங்கிலே கௌரவிக்கப்பட வேண்டிய கலீலியோ சிறைபுக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சிறையிலிருந்து வெளியேறினர் மேலும் பல ஆராய்ச்சிகள் நடத்தினர். கலீலியோ கி. பி. 164-ம் ஆண்டு இயற்கை எய்தினர்.

வாழ்க கலீலியோ நாமம்!

யூ. எல். தாவூது
ஜூனியர் பாடசாலை
இல: 1632, ஏருவூர்

## மாணிக்கம்

மாணிக்கம் அந்த அழகிய பங்களாமுன் சோகமே உருவெடுத்தாற்போல் உட்கார்ந்திருந்தான். அவனது கன்னங்கள் வீங்கி இருந்தன. பாவம்! மாணிக்கம் அந்த பங்களாவில் தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அன்று ஏதோ தவறுதலாக விளக்கின் சிம்னியை உடைத்து விட்டான். அதற்காகவா அந்த பங்களாவின் சொந்தக்காரரான முதலியார் இப்படி அடித்தார் அந்தச்சிறுவனை?

வலியும் களைப்பும்வாட்ட அந்தப் புல்தரையின் மேல் தனது கிழிந்த துண்டை விரித்துப் படுத்தான். தூக்கம் வரவில்லை. அவனது மனம் ஒரு நிலையில் இருந்தால்தானே! "இவ்வளவு நாள் அவருக்கு மனமார வேலைபார்த்தும் ஒரு அற்ப விஷயத்துக்காகத் தன்னை அப்படி அடித்துத் துரத்தலாமா? சீ! நன்றி கெட்டவர்" என்றது அவனது உள்ளுணர்வு. அவனது சிந்தனையைச் சிதற அடிக்க தூரத்தில்வந்தகார் 'இடைவிடாது கத்திக்கொண்டு வந்தது. முதலியாரின் பங்களா முன் ரஸ்தாவில் முதலியாரின் மகன் உலகமறியாத பாலகன் விளையாடிக் கொண்டிருந்தான். மாணிக்கம் யோசிக்கவில்லை. ஒரே பாய்ச்சலில் சென்று அக்குழந்தையைத் தூக்கிவந்தான். கார் பெருஞ் சப்தத்துடன் நின்றது. தற்செயலாக அங்கு வந்த முதலியார் இந்தக் காட்சியைக் கண்டு பதறிப் போனார். முதலியார் மாணிக்கத்தைக் கட்டித் தழுவினார். 'மாணிக்கம்! உண்மையில் மாணிக்கந்தான். அந்த விலைபெறும் சிம்னியை உடைத்ததற்காக உன்னை அப்படி அடித்தேன். விரட்டினேன். ஆனால் இப்பொழுது நீ விலைமதிக்க முடியாத என் மாணிக்கத்தை மீட்டாய். இன்றையிலிருந்து நீ வேலைக்காரன் இல்லை. என் மகன்!" என்று நாத் தழுதழுக்கக் கூறினார். மாணிக்கத்தின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் வடிந்தது. அது ஆனந்தக் கண்ணீர்.

இ. ஜி. அருளேசபி,
கண்டி.

## தேசத் தொண்டு

"பெற்ற தாயும் பிறந்த
பொன்னாடும்
நற்ற வானிலும் நனி
சிறந்தனவே"

என்றதன்படி யாம் எந்தத் திவ்விய பூமியில் திருவவதாரஞ் செய்தோமோ அப்புண்ணிய பூமியே எமது தேசம். அஃது எமது நாடு! நம் நாடு! என்று எவ்வளவோ போற்றிப் புகழுகின்றோம். அங்ஙனமே அந்நாட்டு மக்களை எமது சகோதரர்களெனக் கருதிப் பாராட்டுகின்றோம். எனவே எமது தேசத்தின் பால் எமக்கு ஓர் தனி உணர்ச்சி உதயமாகின்றது. அதன் நிமித்தம் "நமது நாடு, நமது நாடு, நம் நாடு!" என்ற வீர வாக்கை விருது வாக்காக்க எத்தனிக்கின்றோம்.

இன்று உலகம் போற்றும் உத்தமன் காந்தியடிகள் தனது வாழ்வைத் தேசத்திற்காகப் பலியிட்டார். ஏன். அவர் தன்னலங்கருதாது பொது ஜன வாழ்விற்காகத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தார்.

நாம் கிணற்றுத் தவளையைப்போன்று உண்டு உறங்கி வாணாளை வீணாகக் கழித்தலைவிட தேசத்திற்காக வாழ்வோமாகில் யாம் உயர் நிலையிலவதரித்ததன் உயர்வு பிரகாசமடையும். எனவே யாம் பிறருக்காக வாழ்வதே சாலச் சிறந்தது.

ஆகையால் மாணவர்களாகிய நாமும் எமது தேசத்திற்காக, எமது தேச நலத்திற்காக வாழ்ந்து தேசத்தியாகி என்ற புகழுடன் வாழ்வோமாக.

வே. முருகையா
சென்ற் பீட்டர்ஸ் கல்லூரி
பதுளை

## விரல் சூப்புதல்

சில பிள்ளைகளிடத்தில் பல கெட்ட பழக்கங்கள் உண்டு. அவைகளில் மிகவும் கெட்டது விரல் சூப்புதலாகும். சில பிள்ளைகள் பதினைந்து பதினாறு வயது வந்த பிறகுங்கூட விரலை வெட்கமில்லாமல் சூப்புவார்கள்.

விரலைச் சூப்புவதால் நமக்குப் பல வியாதிகள் வருகின்றன. நகத்திலுள்ள அழுக்குகள் விரல் சூப்புவதின்மூலம் வயிற்றறைகுள் சென்று எமக்கு அநேக கேடுகளை விளைவிக்கின்றது. அத்தோடு நாம் கை விரலை எப்பொழுதும் சூப்பிக் கொண்டே இருந்தால் நாளடைவில் அந்த விரலே சூம்பிப் போய்விடும்.

பிள்ளைகள் விரல் சூப்புவதை அவர்கள் சிறுவராயிருக்கும்போதே பெற்றோர்கள் கண்டிக்கவேண்டும். பெற்றோர்கள் "நாளடைவில் சரியாப்போய் விடும்" என்று நினைத்துக் கொண்டு கவனியாவிட்டால் நாளாகஆக அதே பழக்கம் நிலைத்து நின்றுவிடும். விரல் சூப்புவது ஒரு கொடிய நோயைப் போலாகும். அதற்குமருந்து எங்கும் கிடைக்காது. நாம் சிறு வயதிலேயே சூப்புவதை நிறுத்துவதுதான் அதற்குள்ள ஒரே மருந்து.

டி. ஆர். வைஜயனி.
கதிரேசன் கல்லூரி
நாவலப்பிட்டி






ஐக்கிய நாட்டு சாஸனத்தின் வருடாந்த விழாவை முன்னிட்டு (இச்சாஸனம் ஏழு வருடங்களுக்குமுன்ப சான்பிரான்சிஸ்கோ நகரத்தில் கையெழுத்திடப்பட்டது) அமெரிக்கக் குழந்தைகளினால் ஐ. நா. சபைக்குப் பரிசாக அளிக்கப்பட்ட இந்த அழகிய வேலைப்பாடுள்ள செயற்கை நீரூற்று ஐ. நா. தலைமைக் காரியாலயத்தின் முற்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அலைசார்ந்தாடும் அலைகளைப் போன்ற ஸ்டீல் கோடுகள் நிறைந்த ஒரு சிறிய குளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நீரூற்று இரவில் மின் சாரத்தின் ஒளியில் சுடர்விட்டு பிரகாசிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியக் கவிதை

# 'உச்சால சாய வாப்பா உறுகாமம் போகிருரு'

## பச்சைக் குழந்தையின் மூலம் மச்சானுக்கு தூதிடும் மங்கை!

எம். எம். சாலி

ஆமினு அரிசி அரித்துக் கொண்டிருந்தாள் அதே வேளையில் ஏதோ ஒரு நினைவு அவளுடைய அழகிய நெஞ்சத்தையும் அரித்துக்கொண்டிருந்தது. அரிக்கஞ்சட்டிக்குள் நீர்வார்த்து, சிவந்த கையினுல் அரிசியைக் குழைத்துக் கொண்டிருந்தாள். இனந்தெரியாத அந்த நினைவும், அவள் பருவ நெஞ்சத்தை பிசைந்து கொண்டிருக்க வேண்டும்! கைக் கடிகாரத்தின் நிமிடக் கம்பிபோல் அவளுடைய வேலை தவழ்ந்து கொண்டிருந்தது 'ஆம், இல்லை, சரி' என்ற அளவில் பேச்சுரிமைபெற்ற கிராமியப் பெண்களின் மன ஆசைகள் பெருமூச்சாகத் தானே மாற முடிகின்றது? ஆமினு ஒரு பெருமூச்சுவிட்டாள்!

குனிந்தபடி அரிசியைக் கழுவிக் கொண்டிருந்தவள் 'கா-கா' என்ற கரைதல் ஒலி கேட்டு நிமிர்ந்தாள். சுருங்கிப்போய் இலேசாக நடுங்கிக்கொண்டிருந்த சிவந்த உதடும் சற்று நிமிர்ந்தது. பூவரசங் கிளையில் அமர்ந்திருந்த காகம் 'தானும் தன் பாடுமாக' புன்னகைபால் தத்தளித்து நெளிந்தது!

'வருரோ என்னையோ? என்று கசிந்து கலங்கிய அவள் நெஞ்சத்தில் காகம் இன்பம் வார்த்து விட்டது வேதனையை நீக்கி வீண் கவலையைப் போக்கிற்று. ஒரு பிடி அரிசையள்ளி வீசினுள்.........

'விளையாட்டா......? காக்கைக்கு வீசுகிருயே? குழந்தை மாதிரி! இரணமல்லவா அது? —தாயின் வார்த்தையைக் கேட்டதும் அப்படியே சமைந்து விட்டாள். ஏனே தானே என்று வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குட் சென்றுள் தன்னைச் சமாளித்துக் கொண்ட போதிலும் அந்த நினைவையும், ஏக்கை அளித்த உணர்வையும் அவளால் ஒழுங்குபடுத்த முடியவில்லை. ஒவ்வொரு வேலையிலும் தயங்கினுள் நடுங்கினுள்

மகளுடைய நிலையைக் கண்டதும் தாய் கலங்கினுள். 'மகளைக் கண்டித்துவிட்டோம்' என்று வருந்தினுள். அருமையாக வளர்த்து போற்றப்பட்டு வரும் மகளை கடிந்து பேசியதை எண்ணித தாய்மனம் வேதனைப்பட்டது. மகள் தயங்கி-நடுங்கி ஊமைபோல் இயங்குவது தனது கடிந்துரையால்தான் என்பது அவள் முடிவு

மகள் 'பெரிய மனுஷான பிறகு தனிப்பற்றும் தனி மதிப்பாகவுமே நடத்தி வந்தாள். சிறு சிறு வேலைகளுக்கு மட்டுமே இடமளித்து வந்தாள். 'அப்படியாக நடத்திவிட்டு இன்று கடிந்து பேச நேர்ந்ததே' என்று எண்ணும்போது அவள் நெஞ்சையறுக்கும்! அன்பு நிறைந்த மனத்தைச் சுடும்! இதே கவலையால் அவள் உண்ணவில்லை. ஆமினுவும் உணவுகொள்ளாது தூங்கிவிட்டாள்.

அழுகைச் சத்தம் கேட்டு ஆமினு எழுந்தாள் மாமாவுடைய மகன்—கைக்குழந்தை-வட்டாவைக் கவிழ்த்துவிட்டு அழுதான்; அழுது கொண்டிருந்தான் எழுந்து தலைமயிரைக் கோதி முடிந்துவிட்டு குழந்தையை அணைத்துக்கொண்டாள்! நெற்றியில் ஒன்று, கன்னத்தில் ஒன்று, கழுத்தில் ஒன்றுமாய்க் கொஞ்சி மகிழ்ந்தாள். அழுத குழந்தையும் மகிழ்ந்தது! சிட்டுக்காட்டி, சிறுகதை சொல்லியவளாய் நாவல் மரத்து நிழலில் நடைபழகிக்கொண்டிருந்தாள்!

'கெதியாக நட கிளி' என்ற வார்த்தை ஆமினுவின் செவியில் அடங்குதற்குள் அந்த நினைவும் காக்கை தந்த உணர்வும் அதிர்ந்தன குதிகால்களை யுயர்த்தி வேலிக்குமேலாகப் பார்த்தாள் காகம் கரைந்தது உண்மையாயிற்று! கைக் குழந்தையைக் கொஞ்சும்போது அவள் புனைந்து கொண்ட எண்ணம் உறுதியாயிற்று! 'ஏலங்கராம்பே' என்று எண்ணிமகிழ்ந்த அவளுடைய மச்சான் 'இஞ்சி மணமே இலாமிச்சை வேர் மணமே என்று கெஞ்சியழைக்கும் அருமை மச்சான்-வைக்கோற் கரத்தையிலிருப்பதைக் கண்டாள்! ஒன்பது பெருநாளை ஒரே நாளில் வரவேற்றுக் களிப்பதுபோன்று மகிழ்ந்தாள்.

'கெதியாக நட' என்று மாடுகளை விரட்டி கிளி என்று தன்னை விழித்தார் என்பதை ஆமினு புரிந்து கொண்டாள் மச்சானுடைய தந்திரத்தை எண்ணும்போது அவள் அங்கமெல்லாம் இனித்தது

வீட்டுக்குப் போவார். வைக்கோற் கட்டுகளை அம்பாரமாக அடுக்கிவிட்டு குளித்துவிட்டு.........' அவளுக்கு தொடர்ந்து எண்ண முடியவில்லை. இளம் வயதில புளிமாங்காயைக் கடித்துவிட்டதுபோன்ற உணர்ச்சி.........

இவ்வளவு கட்டுகளையும் அம்பாரமாக அடுக்குவதென்றுல்......? இன்றைக்கே அடுக்கவேண்டுமென்று அவசரமா? மச்சானும் என்னைப் போலதானே...... குளித்துவிட்டு மட்டும் வருவார்......"

வருவாரா......? வாப்பா வீட்டில் இருக்கிருர். போவது ஆபத்து' என்று எண்ணிவிட்டால்......? அசருக்குப் பிறகு வாப்பா உறுகாமம் போவார் என்பதை அறிவாரா? ஓ அவருக்கு எப்படித் தெரியும்......? ஆமினுவின் எண்ணங்கள் கன்னல்பின்னலாகக் குழைந்தன. கக்கத்திலிருந்த குழந்தை அவளுடை மூக்கையும் காதையுப் குஞ்சுக் கைகளால் அழைத்துக்கொண்டிருந்தது.

ஆமினு மீண்டும் வேலிக்கு அப்பால்பார்வையை எறிந்தாள் வண்டி ஆமை வேகத்தில் ஊர்ந்துகொண்டிருந்தது. 'இந்த ஒழுங்கையால் எப்படிச்செல்லவேண்டும்' என்பது அந்த வாயில்லாப் பிராணிகளுக்கு-மாடுகளுக்குத் தெரியும்!

அடுத்த தடவையாகவும் வேலிக்கு மேலாகப் பார்த்தாள் இல்லை—இதயத்தின் ஏக்கத்தை கண் துவாரங்களாற் காணுமாறு மச்சானுக்குக் காட்டினுள். ஆலமரத்தைத் தாண்டிவிட்டால் வண்டியைப் பார்க்க முடியாது. அவசரப் பட்டவள்போல சுற்றுப்புறத்தை நோக்கினுள் இடுப்பிலிருந்த குழந்தையைக் கைகளில் எடுத்து நெஞ்சோடு சேர்த்துக் கொண்டாள். குழந்தை எதைப் புரிந்துகொண்டதோ? கன்னக் குழிய பொக்கை வாயை அவிழ்த்து புன்னகையைச் சரித்தது ஆமினு இலேசாகச் செருமிக்கொண்டாள்.

"மச்சானே, இன்பம்
மணக்கின்ற சிறுவே
உச்சால சாய—வாப்பா,
உறுகாமம் போகிருரு"

நெஞ்சிலணைந்த குழந்தையின் நெற்றியில் உதட்டை ஊன்றிவிட்டு அந்தக் குழந்தையின் அக்குளில் கூச்சம் காட்டியவளாக பாடிக் களித்தாள். நெஞ்சங் கவர்ந்த அழகிய மச்சானுக்கு "வாப்பா உறுகாமம் போகிருர்" என்பதை மடியிலிருந்த குழந்தையின் வாயிலாக—மாமா மகனின் வாயிலாக—சின்ன மச்சான் வாயிலாக உணர்த்திவிட்டாள்! அவளுடையதிறமை வியப்பிற்குரியதே!

அன்னத்தின் வாயிலாக ஆராக் காதலையுணர்த்தினுள் நளன். நாரையின் வாயிலாக தன் நிலையைத் தெரிவித்தார் சத்திமுற்றத்துப் புலவர்! பச்சைக் குழந்தையின் வாயிலாக வாய்மையுணர்த்துகிருள் இவள். இந்தக் கிராமப் புறத்து மங்கை ஆமினு இலக்கிய இன்பம் கமழ்கின்ற இனிய சிறுவாக மச்சானை அழைக்கின்ருள். அத்தனை தித்திப்பு அவள்!

### இந்தி பாஷையில் ரஷ்யர்கள் பாண்டித்தியம்

—புதுடெல்லி

ரஷ்யாவில் முன்னர் இந்திய தூதுவராயிருந்த திருமதி விஜயலட்சுமி பண்டிட் இங்கு பேசுகையில் இந்தியாவுக்குப் பொதுமொழியொன்று அவசியம் எனக் கூறினுர்.

மாஸ்கோவில் இந்தியாவின் முதலாவது தூதவர் என்ற முறையில் இந்தி மொழியில் எழுதப்பட்ட தனது தகுதிப் பத்திரத்தைத் தாக்கல் செய்ததாகவும், அதிலிருந்த சில குறைகளை ரஷ்ய அயல்விவகார இலாகா அதிகாரிகள் சுட்டிக்காட்டினுர்களென்றும் அவர் குறிப்பிட்டார்.

### சுதந்திரன் சந்தா விபரம

| | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| 1 வருடம் | 8-00 | 8-0-0 |
| 6 மாதம் | 4-50 | 4-8-0 |
| தனிப் பிரதி | 0-15 | 0-2-6 |

சந்தா முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். பத்திரிகை உள்ளூரில் சனிக்கிழமைகளில் கிடைக்கும்படி தபாலமூலம் அனுப்பிவைக்கப்படும்.

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்
194ஏ, தட்டா தெரு, கொழும்பு-12.


# தாம்பர பஸ்பம்

பழனி தண்டபாணி வைத்தியசாலையாரால் சிறப்புடன் தயாரிக்கப்பெறுகிற அரும்பெரும் மருந்துகளில் ஒன்று. ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்து ஆறுமாத காலம் அரும்பாடுபட்டுத் தயாரிக்கப்பெறும் கற்பமருந்து.

22 ஆண்டுகளாக அனுபவத்தில் கையாண்டு பலஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு விடுதலையளித்து ஜெயக்கொடி நாட்டிய சித்த மருந்து இதுவே.

இன்றைக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மருந்துவகைகளில் தாமிரம் என்னும் உலோகத்தின் முக்கியத்தை அறிந்துகொண்டிருக்கிருர்கள், ஆனல் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சித்த முனிவர்களால் தமிழ் ஏடுகளுல் இக்கருத்து வெளியிடப்பட்டு சித்த வைத்தியர்களால் கையாளப்பட்டு வருகிறது.

வாத நோய்களுக்கெல்லாம் தாம்பர பஸ்பம் சிறந்த மருந்து. நரம்பைப்பற்றியது வாதம். நரம்புகள் மெலிவுற்று, கை கால் மொழிக்குமொழி வலி, வீக்கம், நீட்டவும் மடக்கவும் கஷ்டப்படுதல, கை கால் இடுப்புவலி, உளைவு வியாதிகளும் முந்திய வெட்டைநோய், கிரந்தி (SYPHLLIS) ரணம், அரையாப்பு கண்டமாலை, பவுத்திரம் நீர்த்தாரை, ரணம், தேகத்தில் ஊரல், அரிப்பு, தடிப்பு, புத்துரணங்களும் (EXZEMA) குன்மம், வாய்வு, வயிற்றுவலி, பெண்கள் சூதகக்கட்டு. உடம்பு பூரிப்பு கைகால் அசதி, பலவீனம், மபக்கம, வாந்தி, குமட்டல், மாதாந்திர வயிற்றுவலிகளும், ரத்தத்தைப்பற்றிய அநேக நோய்களும், தோலைப்பற்றிய எல்லா நோய்களும் தாம்பர பஸ்பத்தால் குணமாகின்றன.

ஆஸ்த்மா, காசம், க்ஷயம், அண்டவாதம், விரைவீக்கம் ஆகிய நோய்களுக்கும் தாம்பர பஸ்பம் சேர்த்துக்கொடுக்க நல்ல பலன் உண்டு.

நீரழிவுக்கு (DIABETES) இது நிகரற்ற மருந்து என்பதை அனுபவத்தில் கண்டுள்ளோம.

1 மண்டலம் 48 நாள் (காலை மாலையாக 98 வேளை) சாப்பிடக்கூடிய மருந்துகள் தாம்பர பஸ்பமும் அனுபானம் மேகச்சூரணமும் விலை ரூ. 45-0-0.

நோய் விபரம் எழுதினுல் தலைமைவைத்தியருடன் ஆலோசித்து பகலில் சாப்பிட லேகியமும் தேய்த்துக்குளிக்க தைலமும் தீர்மானித்து அனுப்பலாம். ரூ 20-0-0 M. O அனுப்பவும். M. O. அனுப்பினுல் ரசீதும் அனுப்பவும்.

கேட்லாக் இனும்!

## தண்டபாணி வைத்தியசாலை

பெரிய கூடை வீதி, பழனி, (S. India)

Thandapani medical Hall, PALANI (S. India)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான நான்காவது வாரம்

## கிங்ஸ்லி வெம்பிளி வெல்லிங்டன்

[கொழும்பு] [கண்டி] [திரிகோணமலை]

## சினிமாஸ் லிமிட்டெட்டார் திரையிடும் விசேஷ படக் காட்சி!

★ அருமைக் கணவனையும், ஆருயிர் மைந்தனையும் வீட்டை விட்டுத் துரத்தும் பணப்பேய் நாகம்மா.

★ அசட்டு மூர்த்தி அன்புக் கணவனாக - ஆண்பிள்ளையாக நாளடைவில் மாறி அன்னையை எதிர்க்கும்காட்சிகள்.

★ கொடுமையும், சூழ்ச்சியும், சுயநலமும் பின்னிப்பின்னிப் புரையோடிச் செல்லும் பணக்கார சமூகத்தில் அன்பும் அசட்டுத்தனமும் அரவணைத்து வெற்றிபெறும் சம்பவங்கள்

★ அன்புக் கணவனும் இன்பக் கல்யாணியும் கொஞ்சி விளையாடும் நெஞ்சையள்ளும் சித்திரம்.

★ 'நல்ல குடும்பமே நாம் காணும் சுவர்க்கம்' என்ற உண்மையைப் போதிக்கும் வாழ்வுச் சித்திரம்.



# கல்யாணி

வேகமும், விறுவிறுப்பும் நிறைந்த காட்சிகளும், சம்பவங்களும் உங்கள் மனதைக் கவருகின்றன.

கீழ்க்கண்ட ஜ்வலிக்கும் நட்சத்திரங்கள் தோன்றுகிறார்கள்

**நடிகர்கள்:**
எம். என். நம்பியார்
கருணாநிதி, வி எம். ஏழுமலை
டி. பாலசுப்ரமண்யம்


**நடிகைகள்:**
பி. எஸ். சரோஜா,
எம். சரோஜா, பி. எஸ்.
ஞானம், எம. எஸ். சுபத்ரா

**டைரக்ஷன்:**
ஆச்சாரியா-
எம். மஸ்தான்

**கதை:**
மாடர்ன்தியேட்டர்ஸ

**இசைஅமைப்பு:**
எஸ். தக்ஷிணாமூர்த்தி,
ஜி. ராமநாதன்

**வசனம்:**
ஏ. எஸ். நாகராஜன்



**காமினி** வெள்ளி முதல்
கீதாபாலி, நூராராய், குக்கூ, ஜீவன் நடிக்கும்
## பாய் பாஹன்
(சிறந்த ஹிந்திப் படம்)

**மைலன்** வெள்ளி முதல்
நாடியா, ஜோன் கவாஸ் நடிக்கும்
## ஜங்கிள் கா-ஜாவஹர்
(ஹிந்திப் படம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்ஸ்தாபனத்தாரின் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஆகஸ்ட் 24ந் தேதிபிரசுரம்செய்யப்பட்டது